janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2024 ஜனவரி 14 - ஜனவரி 20 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 41




## ஒன்றிய அரசே! கடுமையான தேசியப் பேரிடராக உடனே அறிவி! தமிழ்நாடு அரசு கோரிய நிவாரண நிதியை முழுமையாக வழங்கு!

# ஜன.8ல் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்

**மிக்ஜாம் புயல், வெள்ளத்தால் டிசம்பர் 3, 4 தேதிகளில் தலைநகர் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் கடுமையான சேதாரத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து 17, 18 தேதிகளில் தென்தமிழகத்தில் பெய்த பெருமழையால் தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.**

சென்னை பெருநகர் மற்றும் எட்டு மாவட்டங்களில் சுமார் 2 கோடிக்கும் மேற்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை நிலைகுலைந்து போனது. சிறு, குறுநடுத்தரத் தொழில்கள், வணிக செயல்பாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த பாதிப்புகளை முழுமையாக மதிப்பிட்டு, தமிழ்நாடு இயற்கை பேரிடர் பாதிப்பில் இருந்து மீண்டு, மறுவாழ்வு பெறுவதற்கு தர ரூபாய் 37 ஆயிரத்து 907 கோடி பேரிடர் நிவாரண நிதி வழங்க வேண்டும் என ஒன்றிய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

ஆனால், ஒன்றிய அரசு பாதிப்புகளை எதிர்கொள்ள நிதியுதவி அளிக்க மறுத்து, தமிழ்நாட்டையும், மக்களையும் வஞ்சித்து வருகிறது. மேலும், ஒன்றிய நிதியமைச்சர் உட்பட பாஜகவினர் மலிவான அரசியல் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.




இதனை கண்டித்தும், கடுமையான தேசிய பேரிடராக அறிவித்து தமிழ்நாடு அரசு கோரியுள்ள ரூ.37 ஆயிரத்து 907 கோடியை விரைந்து வழங்க வலியுறுத்தியும் 08.01.2024 அன்று தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### கிருஷ்ணகிரி

கிருஷ்னகிரி மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக தேன்கனிக்கோட்டை, ஒசூர், தளி, கெலமங்கலம், பாகலூர், கிருஷ்ணகிரி, அஞ்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்
























# வஞ்சகத்தின் மொத்த உருவம் மோடி

போர்க்குணமிக்க தோழர்களே!

**கடந்த டிசம்பரில் புயலும், பெய்திட்ட பெரு மழையும், வெள்ளப்பெருக்கும், தமிழ்நாட்டின் ஒன்பது மாவட்டங்களை நிலைகுலையச் செய்துள்ளது.**

இம்மாவட்டங்களில் ஏறத்தாழ 2 கோடி மக்கள் மிகக் கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளனர்

விலைமதிக்கவொண்ணா மனித உயிர்கள் பலியாகின. ஏழை, எளிய மக்கள் தங்களின் இருப்பிடமான குடிசை வீடுகளை இழந்தனர்.

மாடி வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியிருந்தவர்களின் வீடுகளில் கூட மழை வெள்ளம் புகுந்தது.

கால்நடைகள் ஆடு, மாடுகள் பலியாகின. விளை நிலங்களில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற்கதிர்களும், இளம் பயிர்களும், நடவு செய்திட தயார் நிலையில் இருந்த நாற்றுகளும், சோளம், மக்காசோளம், கடலை, சிறு கிழங்கு, வாழை, உளுந்து என அனைத்தும் நாசமாகி விவசாயிகளுக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தியது.

இவைகள் அனைத்தையும் ஒன்றிய அரசால் அனுப்பி வைக்கப்பட்ட உயர்நிலைக் குழு வந்தது, பார்வையிட்டது, முதலமைச்சரையும் சந்தித்து அறிக்கை பெற்று டெல்லிக்கு பறந்து சென்றது. ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் வந்தார். ஹெலிகாப்டர் மூலம் சுற்றிப் பார்த்தார். தனது கவலையை தெரிவித்து விட்டு வந்த வேகத்தில் டெல்லிக்கு பறந்து சென்றார்.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஏட்டிக்கு போட்டியென தமிழ்நாட்டுக்கு எதிராக பேட்டி கொடுத்தார். அவரது பேட்டி கடும் கண்டனத்திற்கு உள்ளானது.

பின்னர் தூத்துக்குடி மாவட்டத்திற்கு வந்தார். வெள்ள பாதிப்பை சில இடங்களில் பார்வையிட்டு போஸ் கொடுத்து சென்றார்.

தமிழ்நாடு அரசு குறிப்பாக முதலமைச்சர், ஒன்றிய அரசிடமிருந்து பேரிடர் நிதியை பெறவும், பேரிடர் மாவட்டங்களாக அறிவிக்கக் கோரியும் பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டார்.

ஒன்றிய அரசு அனுப்பி வைத்த உயர்நிலைக் குழுவிடம் கோரிக்கை மனு அளித்தார்.

ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்தார். டெல்லி சென்று பிரதமரை நேரில் சந்தித்தும் கோரிக்கை வைத்தார்.

தூத்துக்குடிக்கு வருகை தந்த நிதியமைச்சரிடம், தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசும் கோரிக்கை மனு அளித்தார்.

இதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. இந்நிலையில், திருச்சிக்கு வருகை தந்த பிரதமரை விமான நிலையம் சென்று முதலமைச்சர் வரவேற்றார்.

பல்வேறு ஒன்றிய அரசின் திட்டங்களை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியில், பிரதமருடன் முதல்வர் கலந்து கொண்டார்.

புயல் மழை, வெள்ள பாதிப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்து, தமிழ்நாட்டிற்குரிய நிதி தேவையின் அவசர, அவசியத்தை எடுத்துரைத்தார்.

அரசியல் நாகரீகம் அற்ற பாஜகவின் வன்முறை கும்பல், முதல்வரின் உரைக்கு இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் கூச்சலிட்டனர்.

தனது கட்சியின் தொண்டர்களின் வெற்றுக் கூச்சலை ரசித்து முடித்துவிட்டு, அதன் பின்னர் கையசைத்து அமைதியை ஏற்படுத்த முயன்றுள்ளார் பிரதமர்.

முதலமைச்சரின் உரைக்குப் பின்னர் உரையாற்றிய பிரதமர், முதல்வரின் வேண்டுகோள் குறித்து தனது உரையில் எவ்வித கருத்தையும் கூற முன்வரவில்லை.

| தமிழ்நாடு ஒன்றிய அரசுக்குக் கொடுப்பது | ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குக் கொடுப்பது |
|---|---|
|  |  |



மாறாக தமிழ்நாட்டையும் , தமிழக மக்களையும் வெகுவாகப் பாராட்டி பேசினார். தான் தமிழ்நாட்டிற்கு வரும் போதெல்லாம் சக்தி பெற்று செல்வதாக கூறினார்.

குறைந்தபட்சம் முதலமைச்சரின் நிதி வேண்டுகோளை பரிசீலிப்பதாகக் கூட தெரிவிக்க முன்வரவில்லை. பிரதமர் தமிழ்நாடு குறித்தும், தமிழக மக்கள் குறித்தும் வானளாவ புகழ்ந்து பேசுகின்றார்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டு மக்களின் துயரத்தை கண்டு கொள்ளத் தயாராக இல்லை. தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்க வேண்டும் என்கிற வக்கிர புத்தியுடன் பிரதமர் செயல்படுகின்றார்.

நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருப்பது ஜனநாயக ஆட்சியா? அல்லது சர்வாதிகார ஆட்சியா? என்கிற ஐயப்பாடு எழுகின்றது.

சர்வாதிகாரியாக இருந்தாலும் கூட, அவர்களுக்கு மனிதாபிமானம் என்று ஒன்று இல்லாமல் இருக்காது.

மோடியிடம் மனிதாபிமானம் சிறிதும் இல்லை என்பது வெளிப்படையாக தெரிகின்றது. மனிதாபிமானம் இல்லை என்பதுடன், அரசியல் பழி தீர்க்கும் வன்ம புத்தி கொண்டவராக மோடி உள்ளார்.

தமிழ்நாட்டு மக்களைப் பாராட்டிப் பேசுவது வஞ்சகப் புகழ்ச்சியாகும், இத்தகைய அணுகுமுறை முற்றிலும் ஜனநாயகத்தை புறக்கணிக்கும் செயலாகும்.

ஜனநாயகத் தன்மை சிறிதும் இல்லாத ஒருவர் இந்நாட்டின் பிரதமராக உள்ளார் என்பது பேரபாயம் ஆகும்.

திருவாளர் மோடி ஆட்சிக்கு வந்த 2014 முதல் 2023 மார்ச் வரை தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட நிதி ரூ. 2 லட்சத்து 88 ஆயிரத்து 627 கோடி. இந்த தொகைக்கான மானியமாக ரூ. 2 லட்சத்து 58 ஆயிரத்து 338 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலிருந்து பெற்றதைவிடவும் அதிகமாக கொடுத்திருக்கிறோம்

கடந்த 2014 முதல் 2023 மார்ச் வரை தமிழ்நாட்டிலிருந்து ரூ.6.23 லட்சம் கோடி நேரடி வரி வருவாயாக ஒன்றிய அரசு பெற்றுள்ளது. ஆனால், மறைமுக வரிவருவாய் குறித்து எந்த தரவுகளையும் மத்திய அரசு பகிர்ந்து கொள்ளவில்லை. தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசுக்கு செல்லும் ஒரு ரூபாய்க்கு மீண்டும் தமிழகத்துக்கு மத்தியிலிருந்து கிடைப்பது 29 பைசாதான்.

ஆனால், பாஜக ஆளும் மாநிலங்களில் இந்த விகிதம் முற்றிலும் மாறுபட்டுள்ளது. 2014}இல் இருந்து 2023 மார்ச் வரை உத்தரப் பிரதேசத்திலிருந்து ரூ.2.23 லட்சம் கோடி மத்திய அரசுக்கு கொடுத்ததில், ரூ.15.35 லட்சம் கோடி திரும்ப கிடைத்துள்ளது.

ஒன்றிய அரசு தனது கட்சி ஆட்சிபுரியும் மாநிலங்களுக்கு கணக்கு வழக்கு இன்றி வாரி வழங்குகின்றது.

பிற கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் இருந்து வாரி சுருட்டி அள்ளி செல்கின்றது. ஆனால் நிதி கொடுக்க மறுக்கிறது.

ஒரு கண்ணில் வெண்ணையும், மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் வைக்கின்ற கொடிய அரசுதான் மோடி அரசு என்பது எத்தனை பேருக்கு தெரியும்.

தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசால் பெறப்படும் ஒரு ரூபாயில், 0. 29 பைசா மட்டுமே தமிழ்நாட்டிற்கு வருகின்றது

பிரதமர் வீடு கட்டும் திட்டம் என்று வாய் கிழிய பேசுகின்றனர். பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் ஒன்றிய அரசு ஒரு வீட்டிற்கு ஒதுக்கும் நிதி என்பது வெறும் 72,000 மட்டுமே, மீதி தொகையான 1.68 லட்சம் ரூபாயை மாநில அரசு தன் நிதியிலிருந்து வழங்கி வருகின்றது.

சென்னை பெருநகரம், இரண்டாவது மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் 63246 கோடி ரூபாயில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தை ஒன்றிய உள்துறை அமைச்சர் திருவாளர் அமித்ஷா தொடங்கி வைத்தார்

இத்திட்டத்திற்கான செலவில் 50 சதவீத தொகையை ஒன்றிய அரசு வழங்கியிருக்க வேண்டும். ஆனால், இதுவரை ஒரு ரூபாய் கூட ஒன்றிய அரசு வழங்கவில்லை என்ற அநியாயத்தை தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்றிய அரசின் அணுகு முறை எத்தகைய அபாயகரமான ஜனநாயக விரோத செயல் என்பதனை புரிந்து கொள்வீர்!

பெருமழை, வெள்ளம், புயலால் தமிழகம் பாதிக்கப்பட்ட நிலையில், அரசு அறிவித்த நிவாரணங்களை வழங்கவும். மற்ற கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிய நிதி 37907.19 கோடி.

ஆனால் ஒன்றிய அரசு இதுவரை ஒரு பைசா கூட வழங்கவில்லை

மாநில அரசு கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் இதுவரை 2027 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு ஒரு பக்கம் ஆளுநர் மூலமாக நெருக்கடி கொடுப்பது.

மற்றொருபுறத்தில் வருமானவரித்துறை, அமலாக்கத்துறை மூலமாக நெருக்கடி கொடுப்பது. நீதிமன்றங்களின் மூலம் முடிந்து போன வழக்குகளை திரும்பவும் விசாரணைக்கு எடுப்பது!

இவைகள் அனைத்தையும் கடந்து நிதி நெருக்கடியை கொடுப்பது என்கிற பல்முனை தாக்குதலை தொடுக்கும் அருவருக்கத்தக்க அரசியலை பாஜக ஒன்றிய அரசு மேற்கொண்டு வருவது மிகக் கடுமையான கண்டனத்திற்குரிய செயலாகும்.

இத்தகைய மக்கள் விரோத, ஜனநாயக விரோத, சர்வாதிகார, பாசிச அரசை அகற்ற ஆயத்தமாவோம், மக்களை அணி திரட்டுவோம், மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

**பொங்கல் வாழ்த்துகள்**

ஜனசக்தி வாசகர்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள், உழவர் பெருமக்கள் உள்ளிட்ட தமிழக மக்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துகளை ஜனசக்தி தெரிவித்து கொள்கிறது.

– ஜனசக்தி ஆசிரியர் குழு



# பில்கிஸ்பானு பேசுகிறேன்!

**அப்போது எனக்கு வயது 19. திருமணம் ஆகி 3 வயதில் ஒரு பெண் குழந்தை இருந்தது. மேலும் இன்னொரு குழந்தையை நான் என் வயிற்றில் சுமந்து கொண்டிருந்தேன். என் தந்தையின் வீட்டுக்கு நான் வந்திருந்தேன்.**

துயர்மிகுந்த 2002 பிப்ரவரி 27 அன்று என் வீட்டிற்கு முகத்தில் கலவரமும், பீதியும் சுமந்து என் உறவினர்கள் சிலர் வந்தார்கள். நான் அப்போது சமயலறையில் இருந்தேன். அவர்களது வீடுகள் எல்லாம் தீ வைத்து கொளுத்தப்பட்ட தாகவும், காண்பவர்களை எல்லாம் வெட்டிக் கொல்வதாகவும் பதற்றத்தோடு சொன்னார்கள். செருப்பை மாட்டிக் கொள்ளவோ, மாற்றுத் துணிகளை எடுத்துக்கொள்ளவோ நேரமின்றி கைக் குழந்தையை தூக்கிக் கொண்டு உறவினர்களோடு வீட்டை விட்டு வெளியேறி அங்கிருந்த பள்ளிக் கூடத்தில் தஞ்சமடைந்தோம்.

அது பாதுகாப்பில்லை என்றார்கள். என்னோடு சேர்த்து 17 பேரும், என் வயிற்றில் இருந்த குழந்தையோடு 18 பேரும் ஒரு மசூதிக்குள் தஞ்சமடைந்தோம்.

அதுவும் பாதுகாப்பில்லை என்றார்கள். ஊரை விட்டுக் கிளம்பினோம். ஒவ்வொரு இடமாக ஓடிக்கொண்டிருந்தோம். 18 பேரும் ஊர் ஊராக பாதுகாப்பான இடம்தேடி உயிரைக் காத்துக் கொள்வதற்காக ஓடிக் கொண்டிருந்தோம்.

மார்ச் 3 அன்று ஒரு கும்பல் எங்களை வழிமறித்தது. 20, 30 பேர் இருப்பார்கள். அனைவரும் எங்கள் ஊர்க்காரர்கள். நான் பிறந்தது முதல் அவர்களைப் பார்த்தே வளர்ந்திருக்கிறேன். அவர்கள் சிலரை நானும், என்னை அவர்களும் உறவு சொல்லி அழைத்திருந்திருக்கிறோம். அவர்களைக் கண்டதும் உள்ளூர்க்காரர்கள் என்பதால் பெரிய அச்சம் ஒன்றும் எனக்கு தோன்றவில்லை. ஆனால் அவர்கள் அப்போது வேறொன்றாக மாறி யிருந்தார்கள்.

எங்கள் குடும்ப உறுப்பினர்கள் 17 பேரில் 14 பேரை ஈவிரக்கமின்றி எனது கண் முன்பே படுகொலை செய்தார்கள். அதில் 7 பெண்கள் இருந்தோம். கைக்குழந்தையோடும், கரு வாக இருந்த குழந்தையோடும் நான் இருந்தேன். வீட்டிலிருந்து ஓடிவரும் போது நிறைமாத கர்ப்பிணியாக இருந்து ஓடிக் கொண்டிருந்த இரண்டாம் நாளில் குழந்தையைப் பெற்றெடுத்த என் சித்தப்பா மகளும் அதில் இருந்தார்.

7 பெண்களையும் அவர்கள் எவ்விதக் கருணையுமின்றி கொடூரமான முறையில் ஆயுத முனையில் வல்லுறவு செய்தார்கள். அவர்களின் தாய் வயது, தங்கை வயது, மகள் வயது, பேத்தி வயது இருந்த யாரையும் விட்டு வைக்கவில்லை. எல்லோரும் கொல்லப்பட்டு விட்டார்கள். அதற்கு முன்பு ஒருவரையும் விட்டுவிடாமல் வல்லுறவு செய்தார்கள்.

எந்த தாய்க்கும் நேரக்கூடாத துயரத்தை நான் அனுபவித்தேன். அய்யோ, நினைக்கவே மனம் இப்போதும் பதறுகிறதே.

கர்ப்பிணிப் பெண் என்று பாராமல் என்னை பலரும் வல்லுறவு செய்தார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு குழந்தை பெற்று இருந்த எனது சித்தப்பா மகளையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை.

விலங்கினங்கள் கூட ஈன்ற ஒரு பெண் விலங்கோடு உடனடியாக உறவு கொள்ளாது என்று கேட்டிருந்தேன். ஓட முடியாத நிலையிலிருந்த அப்போது தான் ஈன்றெடுத்த மான் குட்டியை பசியில் இருக்கும் புலி கூட தின்னாது என்று பார்த்திருக்கிறேன். ஆனால் அந்தக் கயவர்களைப் பொறுத்தவரை அனைத்தும் பொய்யாய்ப் போனது. நானும் கொல்லப்பட்டு விட்டதாகவே நினைத்து அவர்கள் சென்றுவிட்டார்கள்.

ஆனால் எனக்கு உயிர் இருந்தது. என்னோடு 7 வயது, 4 வயதுச் சிறுவர்கள் மட்டும் உயிர் பிழைத்திருந்தார்கள். அதாவது, எங்கள் குடும்பத்தில் 14 பேர் கொல்லப்பட்டு விட்டார்கள்.

தாயை, பெற்றெடுத்த மகளை, சுற்றத்தை, என் சுயமரியாதையை இழந்து நான் துயரின் விளிம்பில், ஆற்றாமையில் நின்று கொண்டிருந்தேன். கொஞ்சம், கொஞ்சமாக மன வலிமையை உருவாக்கிக் கொண்டு புகார் கொடுத்தேன். 14 பேரையும் உடற்கூராய்வு செய்யாமலேயே எரித்துவிட்டார்கள்.

நான் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டது பொய் என்றார்கள். எங்களை கொலை செய்தவர்கள் மட்டுமின்றி, காவல்துறையினர், மருத்துவர், விசாரணை அமைப்புகள் என அனைவரும் குற்றத்தையும், குற்றவாளிகளையும் பாதுகாத்து நின்றார்கள்.

மலைப்பு தான். ஆனாலும் தொடர்ச்சியாக முயற்சி செய்தேன். டீஸ்டா செதல்வாத் போன்றவர்கள் உதவினார்கள். மூடப்பட்ட வழக்கு மீண்டும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவால் திறக்கப்பட்டது. குஜராத் காந்தியின் பூமி மட்டுமல்ல, அது மோடியின் பூமியும் கூட. குற்றங்கள் நடப்பதும், குற்றமிழைத்தவர்கள் கொண்டாடப்படுவதும் வழக்கமாகியிருக்கும் காலம் இது. எனவே, அங்கு நீதி கிடைக்காது என்று அறிந்து வேறொரு மாநிலத்திற்கு வழக்கு விசாரணையை மாற்றக் கோரினோம். உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

மகாராஷ்ட்ராவில் வழக்கு நடந்தது. அந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை முறையாக பதிவு செய்யாத காவல்துறை யினரும், என்னை பரிசோதித்து தவறான சான்றளித்த மருத்துவரும் குற்றத் திலிருந்து விடு விக்கப்பட்டிருந்தார்கள். அதன் பிறகு மேல்முறையீட்டில் அவர்களும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப் பட்டிருந்தார்கள்.

அதில் 11 பேர் சிறையில் அடைக்கப் பட்டார்கள். ஏற்கனவே ஒருவர் இறந்து போனார். நீதிமன்றம் எனக்கு 50 லட்சம் ரூபாய் இழப்பீடும், வீடும், அரசு வேலையும் தர உத்தரவிட்டிருந்தது. நினைவில் கொள்ளுங்கள், நான் இருப்பது குஜராத்தில். மோடியின் குஜராத்தில். பணம் கொடுத்ததோடு நிறுத்திக் கொண்டார்கள்.

வீடும், அரசு வேலையும் தரவில்லை. ஆனால், எனக்கு நம்பிக்கை எஞ் சியிருந்தது. முன்னே நின்ற தடைக் கற்கள் அனைத்தையும் இந்திய நாட்டின் நீதித்துறை விலக்கி, தகர்த்து நீதி வழங்கும் எனற நம்பிக்கையில் இருந்தேன்.

**அந்த நம்பிக்கையில் தான் இப்போது அமிலம் ஊற்றப்பட்டிருக்கிறது.**

இந்தியா தனது சுதந்திர தினத்தை அதன் வைர விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்தது. தங்கள் முகப்புப் படங்களில் மூவர்ணக் கொடியை அடையாளமாக வைத்திருந்தார்கள். தங்களுடைய தனிப்பட்ட முகமல்ல; தனிப்பட்ட விருப்பமல்ல; எங்களுடைய ஒரே அடையாளம் மூவர்ணக் கொடிதான் என்று எல்லோரும் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி இருந்தது. இந்த மகிழ்ச்சி அனைத்தும் எவரையும் மேலும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கும்.

இந்த புன்னகை பூத்த முகங்களுக்கிடையே 11 முகங்கள் சிரித்த படியே வரிசையில் நிற்கிறார்கள். அவர்கள் கழுத்தில் மாலைகள் தொங்குகிறது. அவர்கள் முகத்தில் பெருமிதப் புன்னகை மலர்ந்திருக்கிறது. அவர்களைப் பாராட்டி சிலர் இனிப்பு வழங்கி கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் காலில் விழுந்து வணங்கி சிலர் அவர்களின் ஆசி கோரி நிற்கிறார்கள்.

ஒரு இலை முழுவதும் விருந்து படைத்து அதன் நடுவில் ஒரு துளி விஷத்தை வைத்தது போல பவளவிழா சுதந்திர தினத்தை 140 கோடி மக்கள் கொண்டாடிக் கொண்டிருக்கும் போது இவர்களுடைய விடுதலைக் கொண்டாட்டமும் இருந்தது. ஆம். என் குடும்பத்தில் 14 பேரைக் கொன்றவர்கள். நான் உட்பட 7 பெண்களை பாலியல் வல்லுறவு செய்தவர்கள். இந்திய நீதி வழங்கும் அமைப்பில் உயர்ந்த பீடத்தால் குற்றவாளி கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள்.

அவர்கள்தான் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியக் சுதந்திரமும், இந்தியக் குடியரசும் எப்படி மாறிக் கொண்டிருக்கின்றன என்பதற்கான அடையாளங்களில் ஒன்றாக இருந்தது இது.

இதோ, நான் பிறந்து, வளர்ந்து, தவழ்ந்து, விளை யாடி, படித்து, திருமணம் செய்து, குழந்தை பெற்ற அந்த ஊரில் அவர்கள் கம்பீரமாக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். நான் அந்த ஊரில், அந்த துயரமான நாளுக்கு பிறகு குடியேறவே முடியவில்லை. விசாரணையில் பல்வேறு கட்டத்திலும் என்னை, என் கணவர் யாகூப் ரசூலை, எனது கைக் குழந்தையை கொன்று விடுவதாக, எரித்து விடுவதாக, காணாமல் செய்து விடுவதாக 2002ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மிரட்டிக் கொண்டே இருந்தார்கள்.

எனவே, நிரந்தரமாக இந்த 20 ஆண்டுகளும் நிலையானதொரு இடத்தில் நான் தங்கியிருக்கவே முடியவில்லை. அகதிகளுக்கு கூட முகாம் உண்டு. காந்தி பிறந்த பூமியில் பிறந்த எனக்கு ஒரு முகாம் கூட அல்ல, நிரந்தரமாக ஒரு வீட்டில் கூட இருக்க முடியாத நிலைமையில் ஓடிக் கொண்டே இருந்தேன்.

இந்த காலம் முழுவதும் நான் பட்ட துயரங்களும், துன்பங்களும், வேதனைகளும் உலகில் வேறெந்த பெண்ணுக்கும் ஏற்படவே கூடாது.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது அன்னை மரியாள் பார்த்துக் கொண்டிருந்தாரா? என்று எனக்குத் தெரியாது. ஆனால், இறந்திருந்தாலும் அந்த வலியை அவர் உணர்ந்திருக்கக் கூடும்.

தனது மகன் கண்ணன் கம்சனால் கொல்லப்படக் கூடும் என்று அறிந்த போது, யசோதா என்ன பாடுபட்டிருப்பார். ஆனால் நான் என் குழந்தையை பறிகொடுத்துவிட்டு போராடிக் கொண்டிருந்தேன்.

அது என் குழந்தைக்கு நீதி கேட்ட போராட்டம் மட்டுமல்ல; என்னைப் போன்று ஒரு தாய், தன் கண்முன்னே தன் குழந்தையின் காலைப் பிடித்து தலையை பாறையில் அடித்து கொல்லப்படுவதை பார்க்கும்படியான சம்பவம் நிகழவே கூடாது என்பதற்காக.

ஆனால், இப்போது நான் பார்ப்பது என்ன? இதோ, அந்தக் குற்றவாளிகள் என் ஊரில் உலவிக் கொண்டிருக்கிறார்கள். நானோ மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

“பாவி துச்சாதனன் செந்நீர் அந்தப்
பாழ்த்துரியோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டும் கலந்து குழல் மீதினிற் பூசி
நறுநெய் குளித்தே சீவிக் குழல் முடிப்பேன்
யான்இது செய்யுமுன்னேமுடியேன்”

என்றுரைத்தாள், பாஞ்சாலி.

நான் அப்படிக் கோரமாட்டேன். அவர்களைப் போல் யாரும் மிருகமாக மாறாமல் வாழ வேண்டும். அதற்காக அவர்கள் சிறைக்குள்ளேயே இருக்க வேண்டும் என்பது தான் எனது கோரிக்கை.

கண்ணகியோ, “பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில் ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்” என்று சாபம் உரைத்தாள்.

தன் கணவக்கு அநீதி இழைத்ததால் வந்த கோபம் அது. ஆனால் 14 பேரை அதுவும் தாய், மகள், நெருங்கிய உறவுகள் அனைவரையும் பறிகொடுத்த பிறகும் நான் அப்படிக் கோரமாட்டேன்.

இந்த நாட்டையும், நாட்டு மக்களையும், ஒவ்வொரு உயிரையும், அந்த உயிரின் உறவுகளையும் நான் நேசிக்கிறேன். யாருக்கும் தீங்கிழைப்பதோ, தீங்கிழைத்தோரை தீயிடுவதோ, தீ தின்னட்டும் என சாபம் விடுவதோ என் நோக்கமல்ல!

ஆனால் இப்படி கொடிய குற்றவாளிகள் 11 பேரும் ஊருக்குள் தலைநிமிர்த்தி திமிரோடு பவனி வருவது நீடிக்கும் என்றால், இந்த நாட்டை யார் நாடு என்பார்? இந்த மக்களை யார் மனிதர்கள் என்பார்? இந்த நீதித்துறையை யார் நீதி வழங்கும் அமைப்பு என்பார்?

என் தாய்நாடு நீதிமறுக்கப்பட்டவர்களின் தேசமாகவும், நீதி மறுப்போர் ஆளும் காடாகவும் மாறிவிடக் கூடாது.

எனவே,

இனி இது என் துயரம் அல்ல; இந்திய மக்களின் துயரம். இந்த தேசத்தின் பெருமையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு. எனவே, இதை ஒவ்வொரு இந்தியரும் உரத்துச் சொல்ல வேண்டும்.

**– முகநூல் பதிவு**

## பில்கிஸ் பானு வழக்கு:
## 11 குற்றவாளிகளின் விடுதலை செல்லாது!

பில்கிஸ் பானு வழக்கு மகாராஷ்டிராவில் நடைபெற்றதால் 11 பேரை விடுவிப்பது குறித்து மகாராஷ்டிரா அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்றும் குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்ய குஜராத் அரசுக்கு அதிகாரம் இல்லை என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. குற்றவாளிகள் 11 பேரும் இரண்டு வாரங்களுக்குள் சிறையில் சரண்டைய வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 41

# மாலத்தீவின் மீது ஏன் இந்தப் பாய்ச்சல்?

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அண்மையில் லட்சத்தீவுகளுக்கு பயணம் மேற்கொண்டார். அதன் அழகான கடற்கரையில் அவர் அமர்ந்திருக்கும் படத்தை வழக்கம் போலவே எக்ஸ் (ட்விட்டர்) தளத்தில் பதிவு செய்திருந்தார்.

அந்தப் பதிவுக்கான பின்னூட்டத்தில், நமக்கருகில் உள்ள மாலத்தீவு நாட்டின் மூன்று துணை அமைச்சர்கள், தரம் தாழ்ந்து விமர்சனம் செய்தனர்.

இந்தியப் பிரதமரை பற்றி, இன்னொரு நாட்டின் அமைச்சர்கள் தரம் தாழ்ந்து கருத்துக்களை வெளியிடுவது ஒருபோதும் ஏற்கத்தக்கது அல்ல. அது கண்டனத்துக்குரியதாகும்.

மாலத்தீவு நீண்ட காலமாக இந்தியாவுடன் நட்புறவு கொண்ட நாடாகும். அந்த நாட்டுக்குச் செல்லும் மிக அதிகமான பயணிகள் இந்தியர்களே ஆவர். இந்தியாவை அந்த நாடு பகைத்துக் கொள்ள முடியாது, பகைக்கவும் கூடாது

இதை உணர்ந்துள்ள மாலத்தீவு அரசு, இந்தச் செய்தி வெளியானதுமே, அது அரசின் கருத்து அல்ல; அமைச்சர்களின் தனிப்பட்ட கருத்து என்று அறிக்கை வெளியிட்டதோடு,அவர்களை உடனடியாக இடைநீக்கமும் செய்துவிட்டது.

இந்திய அரசாங்கம் இந்தியாவிலுள்ள மாலத்தீவு தூதரை அழைத்து அவரிடம் தனது கண்டனங்களை பதிவு செய்தது சரியானதே.

ஆனால் பிஜேபியை சார்ந்த ஊடகங்களும் இணையதளங்களும் மாலத்தீவு அரசு மீது வசை மாரி பொழிய ஆரம்பித்தன. மாலத்தீவை புறக்கணியுங்கள் (பாய்க்காட் மால்தீவ்ஸ்) என்ற வாசகம் ட்ரெண்டிங் ஆனது.

பாலிவுட் நடிகர்கள் ‘நாங்கள் மாலத்தீவுக்கு போகப் போவதில்லை. வேறு யாரும் போகவும் வேண்டாம். புத்தாண்டு விடுமுறையை கழிக்க வேறு இடங்களுக்கு செல்லுங்கள்’’ என பிரச்சாரத்தை துவக்கினர்.

மாலத்தீவுக்கு சுற்றுலாப்பயணிகளை அனுப்புவதற்காக பதிவு செய்யப்பட்ட விமான டிக்கெட்டுகளை, பயண ஏற்பாடு செய்யும் நிறுவனம் ரத்து செய்தது. மாலத்தீவோடு இனி வியாபாரம் செய்யப் போவதில்லை என்று வணிகர் அமைப்புகள் அறிவித்தன.

அதாவது சுற்றுலா பயணிகள் மூலம் அந்த நாட்டுக்கு வரும் வருவாயைத் தடுப்பது; அந்த நாட்டு மக்களின் வாழ்வுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க விடாமல் செய்வது; இவற்றின் மூலம் மூன்று நபர்களின் கருத்துகளுக்காக அந்த நாட்டு மக்களை தண்டிப்பது என்பது இதன் உள்நோக்கமாகும்.

வெறுப்பு பேச்சு ஆபத்தானது என்று, பிஜேபி பேசுவது தான் வியப்புக்குரியது! பிரதமர் தொடங்கி முதலமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவைகளின் உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் என வெறுப்பு அரசியலை பேசாதவர் அந்தக் கட்சியில் யார் உள்ளனர்? அவற்றைப் பட்டியலிட்டால் தனியாக ஒரு புத்தகமே எழுதலாம்.

பிஜேபியின் செய்தி தொடர்பாளர் நூபுர் சர்மா, முகமது நபியைப் பற்றி தரந்தாழ்ந்து விமர்சனம் செய்தார். மூன்று வளைகுடா நாடுகள் தமது நாடுகளில் உள்ள இந்திய தூதர்களை அழைத்து நமது ஆட்சேபனையை பதிவு செய்தனர்.

“அது சில உதிரிகளின் கருத்து’’ என்று சொன்ன பிஜேபி, அவரை இடைநீக்கம் செய்தது.

அதன் பின்னர், அந்த நாடுகளுக்கு பலமுறை இந்திய பிரதமர் நேரடியாக விஜயம் செய்து இருக்கிறார். மிகுந்த மரியாதையுடன் வரவேற்கப்பட்டிருக்கிறார். வளைகுடா நாடுகளுடன் இந்தியாவின் வர்த்தகம் உயர்ந்து கொண்டே செல்கிறதே தவிர, ஒரு போதும் குறையவில்லை.

அண்மைத் தேர்தலில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட மாலத்தீவு அதிபர், முதலில் சீனாவுக்கு செல்கிறார் என்பது, இந்தியாவுக்கு எதிரான செயலாக வர்ணிக்கப்படுகிறது.

சீனப் பொருட்களை புறக்கணிக்க வேண்டும் என்று இந்திய அரசு வீராவேசம் பேசியது. அந்த நாட்டின் செயலிகளைக் கூட தடை செய்தது. ஆனால் 2015 இல் இருந்து 2021 வரையிலான ஆண்டுகளில் இந்திய – சீன வர்த்தகம் 75.3% அதிகரித்து இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 12.5% உயர்ந்து கொண்டே செல்கிறது.

இந்தியா சீனாவுடன் வர்த்தகம் செய்யலாம், ஆனால் மாலத்தீவு அதிபர் சீனாவுக்கு செல்லக்கூடாது என்று கூறுவதில் எந்த நியாயமும் இல்லை. இந்தியாவிலிருந்து மாலத்தீவுக்கு பயணிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை எவ்வளவோ, கிட்டத்தட்ட அதே அளவுக்கு ரஷ்யாவில் இருந்தும், சீனாவில் இருந்தும் சுற்றுலா பயணிகள் சொல்கிறார்கள்.

மாலத்தீவு பொருளாதரத்தை சரியவைக்க இந்தியா முயற்சிக்குமானால், அந்த நாடு சீனாவின் பக்கம் தள்ளப்படாதா? அது இந்தியாவின் நன்மைக்கு உகந்ததா?

இந்தியாவைச் சுற்றியுள்ள அனைத்து பக்கத்து நாடுகளுடனும், பகைமையை உருவாக்கி வளர்த்துக் கொண்டே இருப்பது ராஜதந்திரம் ஆகாது.

“தீயவை தீய பயத்தலால் தீச்செயல் தீயினும் அஞ்சப்படும்’’ என்று மோடிக்கு யார் சொல்வது?

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

செட்டியில் கன்டண ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### நெல்லை

நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட துணைத்தலைவர் ஆர்.ரெங்கன் சிறப்புரை ஆற்றினார். கே.முருகன், ஏ.சேது ராமலிங்கம், கே.முத்துகிருஷ்ணன், பி.முருகன், எஸ்.ஏ.பி.பாலன், பி.சபியா உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

### திருச்செங்கோடு

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் நகரச் செயலாளர் எஸ்.சுகுமார் தலைமை தாங்கினார். எஸ்.ஜெயராமன், எஸ்.ராமகிருஷ்ணன், பி.தனசேகரன், பி.எஸ்.முனுசாமி, பி.கார்த்திக், என்.செல்வராஜ், எஸ்.தண்டபாணி, டி.கே.சுப்பிரமணி, எம்.செங்கோட்டுவேல் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

### சேலம்

சேலம் மாவட்டத்தில் நான்கு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. செவ்வாய்பேட்டையில் பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு கொண்டலாம்பட்டி மண்டல செயலாளர் ஏ.கந்தன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் க.பாரதி மற்றும் டி.வி.கருணைதாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆட்டையாம்பட்டி எஸ்பிஐ வங்கி முன்பு ஒன்றிய செயலாளர்கள் எம்.பாலன், வி.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் பா.தினேஷ், என்.கே.செல்வராஜ், எஸ்.தனக்கோட்டி, எஸ்.பாலன் உள்ளிட்டோர் கண்டனை உரை நிகழ்த்தினர். ஜலகண்டாபுரத்தில் பழ.ஜீவானந்தம் ஒன்றிய செயலாளர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் பி.பரமசிவம் கண்டனை உரை நிகழ்த்தினார். அயோத்தியாபட்டணம் இந்தியன் வங்கி முன்பு பி.மணி, ஏ.பூபதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகிகள் எம்.ராமன், வி.முருகன் கண்டன உரை நிகழ்த்தினர்.

### அரியலூர்

அரியலூர் தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டக் குழு உறுப்பினர் த.தண்டபாணி தலைமை தாங்க, மாவட்டச்செயலாளர் சொ. இராமநாதன், திருமானூர் ஜி.ஆறுமுகம், ப.கலியபெருமாள் ஆகியோர் உரையாற்றினார்.

### திருச்சி

திருச்சி புறநகர் மாவட்டம் சார்பாக தெப்பக்குளம் தபால் நிலையம் அருகில் கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.சையது அபுதாஹிர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ம.செல்வராஜ், மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, எஸ்.பார்வதி, ஏ.அன்சர்தீன், ராமராஜ், நிர்மலா, க.இப்ராகிம், சுமதி உள்ளிட்டோர் உரையாற்றினர்.

### திருச்சி புறநகர்

மணப்பாறை கோவில்பட்டி சாலை காமராஜ் சிலை அருகில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைச் செயலாளர் இந்திரஜித், ஏஐடியூசி போக்குவரத்து கழக மாநில துணைச் செயலாளர் சுப்ரமணியன், புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

### விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் 12 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வத்திராயிருப்பில் வட்டச் செயலாளர் கோவிந்தன் தலைமையில், தேசிய குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தி.இராமசாமி, மணி குமார், ராமதாஸ் உள்ளிட்டோரும், சத்திரப்பட்டியில் ஒன்றியச் செயலாளர் ராமச்சந்திரன் தலைமையில் மாவட்ட செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.லிங்கம், முத்துமாரி, இராமச்சந்திரன் உள்ளிட்டோரும், சாத்தூரில் நகர செயலாளர் ஜான்ராஜா தலைமையில் மாவட்ட பொருலாளர் எஸ் .பழனிக்குமார் , வட்ட செயலாளர் சுவாமிநாதன் உள்ளிட்டோரும், சேத்தூரில் ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி தலைமையில் துணை செயலாளர் பகத்சிங், நகர செயலாளர் ராஜா, வரதராஜன் உள்ளிட்டோரும், இராஜபாளையத்தில் நகர செயலாளர் விஜயன் தலைமையில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ரவி உள்ளிட்டோரும், திருவில்லிபுத்தூரில் ஒன்றிய செயலாளர் பலவேசம் தலைமையில் பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ , நகர செயலாளர் மூர்த்தி , துணை செயலாளர் செல்வம் உள்ளிட்டோரும், சிவகாசியில் வட்ட செயலாளர் ஜீவா தலைமையில் மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம், தவிச கூடலிங்கம் துணை செயலாளர் கலைவாசன் உள்ளிட்டோரும், அருப்புக்கோட்டையில் வட்ட செயலாளர் முனியசாமி தலைமையில் மாவட்ட துணை செயலாளர் செந்தில்குமார் ,வட்ட துணை செயலாளர் கரியமால் உள்ளிட்டோரும், திருச்சுழி ரெட்டியபட்டியில் ஒன்றிய செயலாளர் செல்வம் தலைமையில் பெரியண்ணன், ஜீவா உள்ளிட்டோரும், ஆலங்குளத்தில் ஜெயபிராஷ் தலைமையில் ஒன்றிய செயலாளர் நடராஜன் ,கூடலிங்கம் உள்ளிட்டோரும், விருதுநகரில் ஒன்றிய செயலாளர் சக்கணன் தலைமையில் மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், நகர செயலாளர் முத்துகுமார் , மாதர்சங்க மாரீஸ்வரி உள்ளிட்டோரும், காரியாபட்டியில் வட்ட செயலாளர் வேலுச்சாமி தலைமையில் இரவி உள்ளிட்டோரும் கலந்து கொண்டார்கள்.

### தஞ்சாவூர் தெற்கு

தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்தில் தஞ் சாவூர்,பூதலூர், திருக்காட்டுப்பள்ளி, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, அதிராம்பட்டினம், மதுக்கூர், சேதுபாசத்திரம் உள்ளிட்டு ஒன்பது இடங்களில் நடைபெற்றது. தஞ்சாவூர் அஞ்சலகம் முன்பு மாநகரச் செயலாளர் ஆர்.பிரபாகர், மாவட்ட குழு உறுப்பினர் பி.குணசேகரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் என்.பாலசுப்பிர மணியன், பி.மோகன், வெ.சேவையா, ம.விஜயலெட்சுமி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

பட்டுக்கோட்டை தலைமை அஞ்சலகம் அருகில் ஒன்றிய செயலாளர் பூபேஷ் குப்தா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பக்கிரி சாமி, கலியபெருமாள் மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பாலசுப்பிரமணியன் வீரப்பன் தனுசீலி காளிதாஸ் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

### தென்காசி

தென்காசி மாவட்டத்தில் மத்திய அரசு அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை, மாவட்டத் துணைச் செயலாளர் வேலாயுதம், ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் டி. சுப்பையா, மாவட்ட ஏ ஐ டி யு சி தலைவர் சி. சுப்பிரமணியன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் எம். எஸ். கிட்டப்பா, சமுத்திரக்கனி, பி. வேலு, எஸ். மாரியப்பன், அந்தோணி, ஜனசக்தி செய்தியாளர் கே. பழனிச்சாமி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் குமந்தாபுரம் கிளை செயலாளர் குற்றாலிங்கம் தலைமையில நடைபெற்றது. தென்காசி மாவட்ட செயலாளர் தி.இசக்கித்துரை, மாவட்ட அலுவலக செயலாளர் கே.பழனிச்சாமி, மாவட்ட விவசாய தொழிலாளர் சங்க செயலாளர் எம். எஸ். கிட்டப்பா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

### நாகப்பட்டினம்

நாகப்பட்டினத்தில் கட்சியின் மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் தலைமையிலும், திருமருகல் ஒன்றியத்தில் சந்திர சேகர் தலைமையிலும், வேதாரண்யம் ஒன்றியத்தில் பாலகுரு தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருக்குவளை பாரத ஸ்டேட் வங்கி முன்பாக கட்சியின் மாநில குழு உறுப்பினர் செல்வம் தலைமையில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.

இதில், கட்சியின் ஒன்றிய துணை செயலாளர் வீ.எஸ்.மாசேத்துங், விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் வீ.சுப்பிரமணியன், இளைஞர் பெருமன்ற மாவட்ட துணை செயலாளர் ரமேஷ், ஒன்றிய தலைவர் கேசவன், ஏஐடியூசி மாவட்ட பொறுப்பாளர் சிவதாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### வேலூர்

குடியாத்தம் மற்றும் பேர்ணாம்பட்டு ஒன்றிய, நகர குழு சார்பில் குடியாத்தம் ஸ்டேட் பாங்க் எதிரில் வி.தொ.ச. மாவட்ட செயலாளர் கே. சி. பிரேம் குமார் தலைமையில் தடைபெற்றது. வி.ச.மாவட்ட செயலாளர் ஏ. டி. எஸ். மகேஷ்பாபு, மாவட்ட குழு உறுப்பினர்கள் கே.கல்பனா சந்தர், ஜி.எஸ்.மூர்த்தி முன்னிலை வகித்தனர். கட்சியின் குடியாத்தம் ஒன்றிய நகர செயலாளர் டி. ஆனந்தன் கண்டன உரையாற்றினர். இதில் ஏராளமானோர் பங்கேற்றனர்.



த.லெனின்

**அயோத்தியில் ராமர் கோயிலை கட்ட கடந்த 2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ம் தேதியன்று பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். 360 அடி நீளம், 235 அடி அகலம், 161 அடி உயரத்தில், 3 மாடிகள், 5 குவிமாடங்கள் கோபுரம், 360 தூண்கள் என பிரமாண்டமாக ரூ.1,100 கோடியில் கோயில் கட்டப்பட்டிருக்கிறது.**

### தேர்தல் ஆதாயத்துக்காக ராமர் அரசியல்!

நாடாளுமன்றத் தேர்தலும் அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவுக்கான நாளும் நெருங்கிக்கொண்டிருக்கிறது. ராமர் கோயில் வேறு, நாடாளுமன்றத் தேர்தல் வேறு என்று இரண்டையும் பிரித்துப் பார்க்க இயலாத அளவுக்கு, கடந்த 30 ஆண்டுக்காலத்தில், தேசிய அளவில் இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவையாக ஆக்கப்பட்டுள்ளது. பாஜக தன் மதவெறி பிளவுவாத அரசியலுக்காக ராமனை கலவர நாயகனாக்கி ஆதாயம் பெற்றது.

இதனை ஒட்டி ஆர்.எஸ்.எஸ். ஆல் நாடு முழுவதும் நான்கு கட்ட பிரசார ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நவம்பர் 19ம் தேதி தொடங்கிய இந்தப் பிரசாரம் டிசம்பர் 20ம் தேதி முடியவடைந்துள்ளது. ஜனவரி 1ம் தேதி இரண்டாம் கட்ட பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. ராமர் படங்கள், துண்டுப்பிரசுரங்களை 10 கோடி குடும்பங்களுக்குக் கொண்டு சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அறிகுறி என்று உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் பேசியிருக்கிறார். 60 ஆண்டுகளாக காங்கிரசால் முடியாததை, 10 ஆண்டுகளில் பா.ஜ.க செய்திருக்கிறது என்று பா.ஜ.கவினர் மேடைக்கு மேடை முழங்குகின்றனர்.

### பத்தாண்டு நெருக்கடியை மறைத்த பாஜகவின் ராமர் தாயத்து!

அதிகாரத்துக்கு தங்களை தேர்ந்தெடுத்த மக்களுக்கு இவர்கள் பெரும் இன்னல்களைத் தான் கடந்த 10 ஆண்டுகளில் இழைத்து உள்ளனர் கடுமையான வேயையில்லா திண்டாட்டம், வணிகமயத்தால் எட்டாக் கனியான கல்வி, இட்டு நிரப்ப இயலா ஏழை, பணக்காரர் இடைவெளி, விலையேற்றத்தால் மக்களின் வாழ்க்கை நிலைகுலைந்து போனது, உற்பத்தி குறைந்தது,ஏற்றுமதி நசிந்து இறக்குமதி அதிகரித்தது, விவசாய வீழ்ச்சி,கார்ப்பரேட்டுகளுக்கும் பெரும் பணக்காரர்களுக்கும் வரிச்சலுகையும் சாதாரண மக்களுக்கு வரிச்சுமையையும் வாரி வழங்கியது, 56 லட்சம் கோடியாக இருந்த கடனை இவர்களது ஆட்சிக் காலத்தில்156 லட்சம் கோடி கடனாக உயர்த்தியது என அனைத்திலும் தோல்வியை தழுவிய பா.ஜ.க அரசுதான் இப்போது ராமர் கோவில் திறப்பு விழாவை தனக்கான பிரச்சாரமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

ராமர்கோயிலுக்கான இயக்கம் தொடங்கிய நாளில் இருந்தே அது நெருக்கடியான பிரச்சினைகளிலிருந்து மக்களை திசைதிருப்புவதும், அடிப்படையில் ஆட்சி அதிகார அரசியல் உள்ளடக்கம் கொண்டதும், எவ்வகையிலும் மதவழிபாட்டுடன், ஆன்மீகத்துடன் தொடர்பற்றதுமான ஒருவகுப்புவாதமதவெறி செயல்பாட்டையே கொண்டிருந்தது.

பாபர் மசூதி இடிக்கப்பட்டது ஜனநாயகத்துக்கு எதிரான செயல்பாடு இந்தியாவின் ஒற்றுமைக்கு நிரந்தரமாக ஊறு விளைவித்து விட்டது. மேலும் இது சட்டத்தின் ஆட்சிக்கு எதிரான கும்பல் வன்முறை மனநிலையை வலுவாக உருவாக்கியும் விட்டது.

நீண்டகால அளவில் அழிவை அளிக்கக் கூடிய ஒன்றாக மாறிவிட்டது. எனவே இது வாக்கு அரசியலுக்கான கறை படிந்த கட்டிடமே தவிற ராமனுக்கான ஆலயம் அல்ல!

### பூரி சங்கராச்சாரியின் எதிர்ப்பு!

இந்த நிலையில், பிரதமர் மோடி சிலையைத் தொட்டு எடுத்து வருவதால் கோவில்திறப்பு விழாவைப்புறக்கணிப்பதாக பூரி மடத்தின் சங்கராச்சாரி சுவாமி நிச்சலானந்தா சரஸ்வதி தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி கடவுள் ராமர் சிலையை தொட்டு பிரதிஷ்டை செய்யும்போது நான் கைதட்டி கொண்டாட வேண்டுமா? ராமர் சிலை பிரதிஷ்டையில் ஆகமம் மீறப்படுவதை என்னால் பார்க்க முடியாது; இது இந்து கலாச்சாரத்திற்கு எதிரானது. ராமர் சிலை பிரதிஷ்டை சாஸ்திரத்தின்படி நடக்க வேண்டும்; கோவில் விவகாரத்தில் அரசியல் தொடரக்கூடாது” எனக்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# அயோத்தி ராமனுக்கான ஆலயம் அல்ல ஆர்.எஸ்.எஸ். மதவெறி கறை படிந்த கட்டிடம்!





இந்த கோயிலில் வரும் 22ம் தேதி குழந்தை ராமர் சிலை வைத்து பிரதிஷ்டை செய்யப்பட இருக்கிறது.

### அழைப்பிதழின் அரசியல்!

அயோத்தி ராமர் கோவில் அறக்கட்டளை சார்பில் மொத்தம் 7 ஆயிரம் சிறப்பு விருந்தினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மோடிக்கு மறுக்கப்பட்ட அமெரிக்க விசா வழங்கியவருக்கும், பல நாடுகளில் செயல்படும் விஎச்பி தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளாக்ள்.

ராமர் கோயில் அமைவதற்கு ஆதரவாக இருந்த பத்திரிகையாளர்களுக்கும், ராமர் கோயிலுக்காகப் பாடுபட்ட 50 கரசேவகர்களின் குடும்பத்தினருக்கும், குறைந்தபட்சம் 50 நாடுகளில் இருந்து தலா ஒரு பிரதிநிதிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 1980ம் ஆண்டு தூர்தர்ஷனில் ஒளிபரப்பான ராமாயணத்தில் ராமர் சீதையாக நடித்த, நடிகர் அருண் கோவில் நடிகை தீபிகா சிக்லியா ஆகியோருக்கும், 4,000 துறவிகளுக்கும் அழைப்பிதழ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் பாபர் மசூதி வழக்கினை போட்ட இசுலாமிய தலைவருக்கும் அழைப்பிதழ் அனுப்பப் பட்டுள்ளது

இந்த அழைப்பிதழில் கோயிலின் பிரமாண்ட தோற்றம் மற்றும் குழந்தை ராமரின் அழகிய புகைப்படத்துடன், ஸ்ரீராம ஜென்மபூமி இயக்கத்தில் பங்கேற்ற முக்கிய நபர்கள் குறித்த விபரங்கள் அடங்கிய கையேடும் இணைக்கப்பட்டுள்ளது. இது தேர்தல் விளம்பரம் தேடுவது தவிற வேறு என்ன?

எதிர் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பபட்டு உள்ளது. இடது சாரி கட்சிகள், தி.முக. ஆர்.ஜே.டி.,ஜேடியூ, சமாஜ்வாடி கட்சி உட்பட பல கட்சிகள் புறக்கணிக்கப் போவதாக அறிவித்து விட்டன. காங்கிரஸ் மட்டும் இன்னும் ஒரு தெளிவான முடிவினை எடுக்க வில்லை .இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கும் பிரதமர் மோடி, கோவில் கருவறையில் வைக்கப்பட உள்ள ராமர் சிலையை எடுத்து வந்து வழங்கவுள்ளதாகவும், அதன்பின்பு அந்த சிலைக்கு பூஜை செய்து கருவறையில் வைக்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனவரி 22ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெறும் நாளில் 3வது கட்ட பிரசாரத்தில் அனைத்து மக்களையும் ஈடுபடுத்தவும் திட்டமிட்டுள்ளதாம்.

கொரனா காலத்தில் விளக்கேற்றி கைதட்டியது போல இந்துக்கள் எல்லோரும் அவரவர் வீடுகளில் விளக்கு ஏற்றி வழிபாடுகளை நடத்தச் சொல்லி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஜனவரி 26 முதல் பிப்ரவரி 22 வரை நடைபெறும் 4வது கட்ட பிரசாரத்தில், பல்வேறு மாநிலங்களிலிருந்து பக்தர்கள் சென்று வழிபடுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன ஆக வாக்கு எந்திரமாகத்தான் ராமர் சித்தரிக்கப்படுகிறார் என்பது விளங்கும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னர், ராமர் கோயில் குடமுழுக்கு விழா நடைபெறுவதால், பா.ஜ.கவின் பிரச்சார உத்திகளில் ராமர் கோயிலுக்கு அதீத முக்கியத்துவம் தரப்பட்டு வருகிறது. ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் பிரசாரத்திலேயே பா.ஜ.கவினர் ராமர் கோயில் குறித்து அதிக அளவில் பேசியிருக்கின்றனர்.

பா.ஜ.க வெற்றிபெறும் மாநிலங்களிலிருந்து மக்கள் அயோத்திக்கு இலவசமாக அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று அமித்ஷாவே பல கூட்டங்களில் பேசினார். ராமர் கோயில் கட்டப்பட்டது ராமராஜ்ஜியம் அமைக்கப்படுவதற்கான

## வினாடி - வினா

1 விளையாட்டு கூட்டமைப்புகள் தவிர உலக நாடுகள் உறுப்பினராக உள்ள முதன்மையான இரண்டு அமைப்புகளின் பெயர்?

2 வளிமண்டலத்தில் பசுமை குடில் வாயுக்கள் மிகுதியானதில் எந்த நாட்டுக்கு அதிக பொறுப்பு?

3 டாக்டர் அம்பேத்கர் புதிய அரசியலமைப்பு சட்டத்தை அரசியல் நிர்ணய சபையில் எப்போது தாக்கல் செய்தார்?



4 நாசிஸ்ட் கொடுங்கோலர்களால் ஜூலியஸ் பூசிக் தூக்கிலிடப்பட்டது எப்போது?

5 கம்யூனிஸ்ட் இயக்கத்தை ஒடுக்குவதற்காக இரண்டாவது நெல்லை சதி வழக்கு எந்த ஆண்டு புனையப்பட்டது?

6 காந்தளூர் சாலை கடற்போர் யார் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது?

விடைகள்
12 ஆம் பக்கம்

# உழவர் தினத்தில் உறுதி ஏற்போம்!



நா.பெரியசாமி



**நாம் வாழும் சமுதாயத்தில் உழைப்பும் உற்பத்தியும் சமூக மயமானது. ஆனால், அதனுடைய உரிமை தனிநபர்களுக்கு, தனியுடைமைக்கு சென்று விடுகின்றன. இதனால் வெகுசிலரிடம் பெரும் சொத்துக்கள் குவிந்திருப்பதும் பெரும்பான்மை மக்கள் அன்றாட வாழ்க்கைக்கே அல்லல்படுவதும் நிகழ்கின்றன.**

வறுமை, ஏழ்மை, பசி, பட்டினியால் உழைக்கும் மக்கள் அவதிக்கு உள்ளாகின்றனர். வரலாற்றுக் கட்டங்கள் மாறினாலும் இன்றுவரை இந்த நிலைமையை தொடர்கிறது.

ஆக்ஸ்பாம் என்கிற சர்வதேச ஆய்வு நிறுவனம் போர்ப்ஸ் செல்வந்தர்கள் பட்டியல் 2022 மற்றும் புளும்பெர்க் பில்லியனர்ஸ் இன்டெக்ஸ் ஆகியற்றை ஆதாரப்படுத்தி இந்தியாவின் உற்பத்தியாகும் சமூக செல்வம் தனிநபர்களிடம் குவிந்து வருவதை அறிக்கை மூலம் வெளிப்படுத்தி வருகிறது. .

நடப்பு புத்தாயிரம் 2000 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் 90 பேர் பில்லியனர்களாக இருந்தனர் (ஒரு பில்லியன் என்றால் நூறு கோடி) கடந்த 2022 ஆம் ஆண்டில் பில்லியனர்கள் எண்ணிக்கை 170 பேராக அதிகரித்துள்ளது. இந்தக் கணக்கில் நமது பிரதமர் மோடிக்கு மிக நெருக்கமான நண்பர் கௌதம் அதானி 106 பில்லியன் டாலர் செல்வ வளத்துடன் பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளார்.

இதுவரை முதலிடத்தில் இருந்து, ஆதிக்கம் செலுத்தி வந்த முகேஷ் அம்பானி 95.4 பில்லியன் டாலர் என்ற அளவில் இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். மூன்றாம் இடத்தில் அஸிம் பிரேம்ஜி இருக்கிறார். அவரிடம் திரண்டுள்ள செல்வ மதிப்பு 27.8 பில்லியன் டாலர். இவர்களிடம் குவிந்துள்ள செல்வம் யாருடைய உழைப்பில் உற்பத்தியானது என்பதை சிந்தித்து பாருங்கள். இந்தப் பணக்காரர்களிடம் குவிந்து கிடக்கும் ரூ 54 12 லட்சம் கோடியை வைத்து, இந்திய ஒன்றிய அரசை 18 மாதங்கள் நடத்தலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த மறுபக்கம் ...

இந்திய மக்களில் 22 கோடியே 89 லட்சம் பேர் ஏழைகளாக இருக்கிறார்கள். இவர்கள் பசியும் பட்டினியுமாக வாழ்க்கை நடத்த போராடி வருகிறார்கள். இந்த எண்ணிக்கை கடந்த 2022 ஆம் ஆண்டில் 350 மில்லியனாக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெரும் எண்ணிக்கையினர் வேலையின்மை, விலைவாசி உயர்வு, நோய் தாக்குதலால் ஏற்படும் மருத்துவ செலவு, சமூக கடமைகளின் சுமைகள் என பல சவால்களை எதிர் கொண்டு வருகிறார்கள். போதிய சத்துணவும் மருந்துவ வசதியும் கிடைக்காததால் பிறக்கும் குழந்தைகளில் 65 சதவீத குழந்தைகள் 5 வயதுக்கு முன்னதாக மரணமடைந்து விடுகின்றன என, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

ஏழை மக்கள், அழைப்பு சார தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட உடல் உழைப்புத் தொழிலாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள், வெளியிடப் பணி தொழிலாளர்கள். திட்டத் தொழிலாளர்கள் என பல பிளவுகளை ஏற்படுத்தி சமூக சொத்துக்களை கார்ப்பரேட் நிறுவனங்கள் சமூக கொள்ளை அடிப்பதை திறன் மிகுந்த நிர்வாகம் என பாராட்டப்படுகின்றது. இதனை எப்படி ஏற்பது. இது எந்த வகையில் நியாயமாகும்.

ஆனால், பிரதமர் மோடியும், அவரது அரசும் இந்தப் பெரும் பணக்காரர்கள் தான் செல்வத்தை உற்பத்தி செய்கிறார்கள். அவர்களது நலன்களை காப்பது தான் ஒன்றிய அரசின் முன்னுரிமை கடமை என வெளிப்படையாக அறிவித்துள்ளார். இப்படி கூறிய பிறகும் அவரை, ஆதரிப்பது அநியாயம் ஆகாதா?

கடந்த 2020 மார்ச் மாதம் வெளிப்பட்ட கொரோனா நோய்த் தொற்றும், அது அலை அலையாக பரவியதும் சமூக வாழ்வை நிலைகுலைத்தது. பல ஆயிரம் சிறு, குறு தொழிலகங்கள் மூடப்பட்டு, அதன் "முதலாளிகள்" தொழிலாளர் பட்டியலுக்கு நெட்டித் தள்ளப்பட்டுள்ளனர். இந்தத் துறையில் வேலை பார்த்த தொழிலாளர்கள், வேலை தேடி அலைவோர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த நெருக்கடியான நேரத்தில், நாட்டின் மக்கள் தொகையில் 60 சதவீதம் பேர் வாழ்வாதாரம் பெற்றுள்ள விவசாய நிலங்களை அபகரிக்கும் திட்டத்தை செயல்படுத்த ஆளும்கட்சி தீவிரம் காட்டியது. மின்சார திருத்தச் சட்ட மசோதா 2020 உட்பட விவசாயிகள் விரோத மூன்று வேளாண் வணிக சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதை மறந்து விட முடியாது.

நல்ல வேளை விழிப்புணர்வு பெற்ற போராளிகள் ஐக்கிய விவசாயிகள் முன்னணி அமைத்து , ஓராண்டு காலம் நீடித்த போராட்டம் நடத்தி உலக சாதனை படைத்தனர்.

56 இஞ்ச் அகலம் மார்பு விரிக்கும் ஆற்றல் கொண்ட பிரதம் மோடி அரசு விவசாயிகள் போராட்டத்தில் பணிந்து, மூன்று வேளாண் வணிக சட்டங்களையும் திரும்பப் பெற்றது. ஆனால் விவசாயிகளிடம் கொடுத்த வாக்குறுதிகள் வழக்கம் போல் காற்றில் பறக்க விடப்பட்டது.

இதற்கிடையில் பாஜக ஒன்றிய அரசு குழும நிறுவனங்களுக்கான வரியை 30 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக குறைத்து, புதிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 15 சதவீத வரி மட்டுமே போதும் என்று அறிவித்து விட்டது. இதனால் அதானி, அம்பானி, அஸிம் பிரேம்ஜி வகையறாக்கள் ரூ 1. 84 லட்சம் கோடி வரிச்சலுகை பெற்றனர் என்பதை அறியும் போது ஆத்திரம் மேலிடுகிறது.

சமூக உற்பத்தி செய்த செல்வத்தை கொள்ளை அடித்து, குவித்துக் கொள்ளும் சமூக விரோதிகள் கம்யூனிஸ்டுகளை பார்த்து "சொத்துப் பறிப்பவர்கள்" என குற்றம் சாட்டுவது ஊரை ஏமாற்றவும், உழைக்கும் மக்களை வஞ்சிக்கவும் தான் என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி போல் உணர வேண்டும்

இந்த உண்மையை 150 ஆண்டுகளுக்கு முன்பு கண்டறிந்த பேரறிவாளர் காரல் மார்க்ஸ் " தனியார் சொத்துடைமையை நாங்கள் (கம்யூனிஸ்டுகள்) ஒழிக்க நினைப்பதை கண்டு (குழும நிறுவனங்கள் நிதி மூலதசைக்திகள்) அச்சமடைகிறார்கள். ஆனால், உழைக்கும் மக்களின் சொத்துக்களில் 10 ல் ஒன்பது பங்கு சொத்துகளை முதலாளித்துவம் கபளீகரம் செய்து கொண்டுள்ளது.

ஒரே வார்த்தையில் சொன்னால் (சமூக உழைப்பை சுரண்டி, ஏமாற்றி சேர்த்துக் கொண்ட) 'உங்கள் சொத்துக்களை' பறிப்பதாக எங்கள் மீது (கம்யூனிஸ்டுகள்) பழி சுமத்துகிறீர்கள். ஆம், நிச்சயமாக அதைத்தான் நாங்களும் செய்ய விரும்புகிறோம்" என பகிரங்கமாக அறி வித்தார்.

அதனை நாம் வழி மொழிந்து வலியுறுத்துவோம்.. பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்கள், நிதி மூலதன சக்திகளின் ஆதரவோடு, அதன் ஆளும் அரசதிகார அடியாளாக செயல்படும் ஆர்.எஸ்.எஸ்., பாஜக மதவெறி ஒன்றிய அரசை வீழ்த்த தமிழர் மரபில் தொன்மை வாய்ந்த தை முதல் நாளில், தமிழர் திருநாளில், உழைப்பை போற்றி வணங்கும் உழவர் தினத்தில் உறுதி ஏற்போம்.

அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

---

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

காட்டமாக தெரிவித்துள்ளார்.

இப்படி பேசியது குறித்து சனாதன ஒழிப்பு குரலுக்கு கடுமையாக எதிர்வினை ஆற்றியவர்கள் என்ன செய்துக் கொண்டு இருக்கிறார்கள்? பிரதமர் சூத்திரன் என்பதற்காக இப்படி பேசுகின்றனர் என்று சிலரால் பார்க்கப்படுகிறது. நமது கேள்வி என்னவென்றால் நாடு முழுவதும் சனாதனத்தை காக்க புறப்பட்ட மாவீரர்கள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? ஏன் மௌனித்துவிட்டனர்? என்பதே

கரசேவை இயக்கம் நடைபெற்ற போது அயோத்தியில் நாட்டப்பட்ட முதல் அடிக்கல்லே பட்டியல் சாதியினர் ஒருவரால் தான் நடப்பட்டது. ஆனால் இப்போது கட்டப்பட்டராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டு விழாவின்போது அன்றைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலித் குடியரசுத் தலைவரை தாங்கள்தான் உருவாக்கினோம் என்றவர்கள் அவரை அதற்கு அழைக்க வில்லை.

இப்போது புதிய நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவின் போதும் பழங்குடியின குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அழைக்கவில்லை. தற்போதைய ராமர் கோயில் திறப்பு விழாவிற்கும் அழைக்கவில்லை. இது ஆர். எஸ். எஸ். மற்றும் சங்க பரிவாரங்களின் கொள்கையை விளக்குவதாகதான் பார்க்கப்படுகிறது. இதுதான் அவர்களது சமூக நீதிப் பார்வை. இந்து மதத்தில் இருக்கும் சாதி படிநிலைகளை காப்பாற்றும் அவர்களது உண்மை முகம்!

### சுப்பிரமணிய சாமியின் சாட்டை அடி!

ஏக பத்தினி விரதனான ராமனின் ஆலயத் திறப்பு விழாவில் மனைவியை கைவிட்ட மோடி பங்கேற்கலாமா? எனக் கேட்டுள்ளார் பாஜகவின் சுப்பிரமணிய சாமி. இதற்கு ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. மற்றும் சங்கிகள் பதில் கூறவில்லை.

ராமர் கோயில் திறப்பு விழா நடைபெற உள்ளதை முன்னிட்டு, அயோத்தி முழுவதும் ஹோட்டல் கட்டணங்கள் உயர்ந்துள்ளன. உண்மையில், ஒரு ஹோட்டலுக்கான ஹோட்டல் கட்டணம் ஒரு இரவுக்கு ரூ.20,925 ஆக உயர்ந்தது. சாதாரணமாக ஒரு இரவுக்கு ரூ.1,900க்கு செல்லும் ஒரு அறை, ஜனவரி 20 முதல் 25 வரை ரூ. 8,000க்கு மேல் கிடைக்கிறது. வழக்கமாக ரூ.1,700க்கு அறைகளை வழங்கும் மற்றொரு ஹோட்டல், தற்போது ரூ.10,000க்கு தங்கும் வசதியை வழங்குகிறது. அயோத்தி அரண்மனை ஒரு இரவுக்கு சாதாரண ரூ.3,700க்கு பதிலாக 16,000க்கு மேல் வசூலிக்கப்படுகிறது.

இதற்கிடையில், தி கேகே ஹோட்டல் டிரீம்ரூம்ஸ் மற்றவை போலவே அதன் கட்டணத்தையும் மூன்று மடங்கு உயர்த்தியுள்ளது. ஆன்மீகத்தை வருமானம் ஈட்டும் வர்த்தகமாக மாற்றி பக்தியின் பெயரால் இந்தப் பகல் சுரண்டல் நடக்கிறது.

ஏற்கனவே அயோத்தி ரியல் எஸ்டேட் துறையில் பெரும் ஊழல்கள் நடைபெற்றுள்ளது என்பது வெளியானது. ஆர். எஸ். எஸ் சங்க பரிவார அமைப்புகளின் தலைவர்கள் அறக்கட்டளையிடம் குறைந்த விலைக்கு நிலத்தை பெற்று ஒரு மணி நேரத்திலேயே பல மடங்கு விலை ஏற்றி விற்று மிகப்பெரிய நில மோசடி ஈடுபட்ட செய்தியை நாம் கண்டோம். இப்போது அறக்கட்டளையின் பெயரிலேயே போலியாக பல நிறுவனங்கள் நன்கொடை வசூலிப்பது நடந்து வருகிறது. ஸ்ரீ ராமஜென்ம பூமி தீர்க்க சரித்திரம் என்ற பெயரிலேயே சட்டத்துக்கு புறம்பாக நிதி வசூலிக்கப்படுவதாக விஷ்வ ஹிந்து பரிஷத்தின் தலைவரே இன்று குற்றம் சாட்டியிருக்கிறார்.

அப்படி என்றால் எந்த வகையிலும் ராமனுக்கான இந்த ஆலயத்தில் ஊழல்கள் தான் உலா வருவது தெரிய வருகிறது. நில பேர ஊழலும், நிதிவசூல் ஊழலும் அவர்களை நெருப்பாய் சுட்டுக் கொண்டிருக்கிறது. வட மாநிலத்தவர் வழக்கமாக பயன்படுத்திய சீதாராம் என்ற முழக்கம் இவர்களால் "ஜெய் ஸ்ரீ ராம்" என்ற வன்முறை முழக்கமாக மாற்றப்பட்டது. மாற்று மதத்தினரை எதிர்க்கவும், அச்சுறுத்தவும், ஒற்றுமைக்காக நின்ற ராமர் பயன்படுத்தப்படுவது தான் அதிர்ச்சியிலும் அதிர்ச்சியாக உள்ளது. ஆக அவர்கள் நடத்துவது ராம ராஜ்ஜியம் அல்ல! மாறாக அராஜகம் தான்!

இந்த அராஜகத்தை துடைத்தெரியும் போரில் மதச்சார்பற்ற முற்போக்கு ஜனநாயக சக்திகள் முன்னணியில் நிற்க வேண்டும் அணி திரள வேண்டும்!

இதிகாச ராமன் ஆட்சியை துறந்தவர். இன்றைய ராமன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே அவதரிக்கப்பட்டவர்.

தொடர்புக்கு: 9444481703

# இனப்படுகொலையில் இஸ்ரேல் தீவிரம்
# சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை!



வ.மணிமாறன்

**பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை போர் 95 நாட்களை (0901 2023) கடந்துள்ளது. 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் சிறார்களும் பெண்களும் ஆகும்.**





21 ஆம் நூற்றாண்டில் நடந்த எந்தப் போரிலும் இல்லாத அளவுக்கு பாலஸ்தீன குழந்தைகள் கொல்லப்படும் விகிதம் மிக அதிகமாக இருக்கின்றது. 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதுடன், பெரும் அளவிலான வெடிபொருட்களையும் பயன்படுத்தி வருகிறது. இதனால் வடக்கு காசா பகுதியில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. பயன்படுத்த முடியாத அளவுக்கு அவை சிதைக்கப்பட்டுள்ளன. சுகாதாரம், உணவு வினியோகம், நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகள் உருக்குலைந்து போயுள்ளன. வீடுகள், பள்ளிகள், மசூதிகள், மருத்துவமனைகள் என அனைத்தும் சிதிலமடைந்துள்ளன. உணவு, தண்ணீர் கிடைக்காமல் தவிக்கின்றனர். காசா பகுதியே காண சகிக்காத நிலமாக காட்சியளிக்கிறது. செத்து மடியும் பாலஸ்தீனர்களை தனித்தனியே புதைக்க வழியின்றி மொத்தமாக அடக்கம் செய்து வருகின்றனர். இப்படி சர்வதேச சட்டங்களை மீறி போர் குற்றங்களை இஸ்ரேல் செய்து வருகிறது.

இந்நிலையில், ஐ.நா. சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேல் மீது தென்னாப்பிரிக்கா போர் குற்ற வழக்கு தொடர்ந்துள்ளது. இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மீறுவதாக குற்றம்சாட்டியுள்ள தென்னாப்பிரிக்கா, காசா மீதான தாக்குதல்களை நிறுத்த ஆணை யிடுமாறு நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனால், சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்ளத் தயார் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கொக்கரித்துள்ளார். “காசாவில் உள்ள மருத்துவமனைகள், பள்ளிகள், மசூதிகளில் ஒளிந்திருக்கும் ஹமாஸ் அமைப்புதான் இதற்குப் பொறுப்பு” என பசப்புகிறார் நெதன்யாகு.

பாலஸ்தீனர்கள் படுகொலையில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மட்டுமல்ல, அமெரிக்க அதிபர் பைடன், கனடா பிரதமர் ட்ரூடோ, பிரிட்டன் பிரதமர் சுனாக், பிரான்ஸ் அதிபர் மக்ரூன் உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளின் தலைவர்களும் கூட்டாளிகளாக உள்ளனர். பாலஸ்தீனர்களின் ரத்தக்கறை நெதன்யாகு மீது மட்டுமல்ல இவர்களின் மீதும் படிந்துள்ளது. இவர்கள் இனப்படுகொலையை நியாயப்படுத்தி வரவேற்றதுடன் பெருமளவிலான ஆயுதங்களையும் வாரி வழங்கி உள்ளனர்.

இஸ்ரேல் மேற்கொண்டிருப்பது இனப்படுகொலை போர். பாலஸ்தீன மக்களை கொன்று அழிப்பதற்கான கொலை வெறி தாக்குதல். இஸ்ரேல் நாட்டுத் தலைவர்கள், அமைச்சர்களின் பேச்சுக்களே இதனை உறுதி செய்கின்றன.

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இடாமர் பென் கிவிர், ஹமாஸை ஆதரிப்பவர்களை “அழித்தொழிக்க வேண்டும்” என வெளிப்படையாக அறிவிக்கிறார்.

இஸ்ரேலின் தகவல் அமைச்சராக இருந்த காலிட் டிஸ்டெல் அட்பரியன், “காசா முழுவதையும் பூமியின் முகத்திலிருந்து” அகற்ற வேண்டும். அங்குள்ள மக்களை எகிப்துக்கு நாடு கடத்த வேண்டும்” என கொக்கரிக்கிறார்.

ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்தின் இயக்குநராக இருந்த கிரேக் மோகிபர், மூன்று மாதங்களுக்கு முன்பு பதவி விலகினார். அப்போது, “ஐரோப்பிய, இனதேசியவாத, குடியேற்ற காலனித்துவ திட்டம் அதன் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. பூர்வீக பாலஸ்தீன வாழ்க்கையின் கடைசி எச்சங்களையும் அழிப்பதை நோக்கிய நடவடிக்கைகள் அரங்கேறி வருகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளின் அரசுகள் இந்த கொடூரமான தாக்குதலுக்கு உடந்தையாக உள்ளன” என்று வேதனையுடன் கூறியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் துர்க், “மிக அடிப்படையான மனிதாபிமான விழுமியங்கள் கூட சீர்குலைந்துள்ளது. இவ்வளவு மக்கள் கொல்லப்பட்டதை உடனிகழ்ந்த துணை சேதம் (collateral damage) என்று கூறுவதை ஏற்க முடியாது” என்று உறுதிபடக் கூறுகிறார்.

ஐநா மனித உரிமைகளுக்கான ஆணையர் அலுவலகம் (OHCHR) வெளியிட்டுள்ள அறிக்கையில், இஸ்ரேல் ராணுவம் வடக்கு காசா பகுதியில் பாலஸ்தீனர்களை பெரிய அளவில் கொன்று வருவதாக குற்றம் சாட்டியுள்ளது. குடும்பங்களிலிருந்து 11 ஆண்களைப் பிரித்து கூட்டாக கொலை செய்ததற்கான ஆதாரங்களையும் வெளியிட்டுள்ளது.

யூரோ மெட் மனித உரிமை கண்காணிப்பகமும் இதே குற்றச்சாட்டை கூறியுள்ளது. இஸ்ரேல் ராணுவம் பாலஸ்தீனர்களை குண்டு வீசி கொல்வதுடன், மொத்த மொத்தமாக கூட்டு மரண தண்டனையை நிகழ்த்தி வருவதாகவும் சாடியுள்ளது.

அல் ரெமால் பகுதியில் உள்ள கட்டிடம் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த மூன்று குடும்பங்களையும் அந்த கட்டிடத்தையும் இஸ்ரேல் ராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அங்கிருந்த ஆண்களை தனியாகப் பிரித்து சுட்டுக் கொன்றது. பெண்கள், சிறார்களை ஒரு அறைக்குள் அடைத்து வைத்ததுடன் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பலர் படுகாயம் அடைந்தனர். இதற்கான ஆதாரங்களை யூரோ மெட் மனித உரிமை கண்காணிப்பகம் திரட்டி வைத்துள்ளது.

வடக்கு காசாவில் உள்ள பெய்த் லாஹியா நகரில், பாலஸ்தீன ஆண்களை ஜட்டியுடன் முழங்காலிட்டு உட்கார வைத்தும் கண்களை கட்டியும் இஸ்ரேல் ராணுவம் துன்புறுத்தி வருகிறது. ராணுவ ஊர்திகளில் அழைத்துச் செல்லப்பட்ட பாலஸ்தீனர்கள் உயிருடன் இருக்கிறார்களா? எங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? என்பது குறித்து எதுவும் தெரியவில்லை.

கைது செய்யப்பட்டு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனர்கள் பெரும் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் மீது மின்சாரம் பாய்ச்சப்படுகிறது. சிகரெட்டாலும் லைட்டர்களாலும் தோலில் சூடு வைக்கப்படுகிறது. உண்பதற்கோ இயற்கை கடன்களை கழிப்பதற்கோ கூட விடாமல், கைகளில் விலங்கு பூட்டி, சங்கிலியால் கட்டிப்போட்டு வைத்துள்ளனர். இப்படி நீண்ட நேரம் கிடப்பதால், அந்த இடத்திலேயே சிறுநீர், மலம் கழித்து நாற்றத்தில் துன்புறுகின்றனர்.

பெய்த் லாஹியா நகரின் மற்றொரு பகுதிக்குச் சென்ற இஸ்ரேலிய இராணுவத்தினர் “காசா எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. நீங்கள் உயிரோடு இருக்க வேண்டுமா? ஹமாஸ் வேண்டுமா? என்பதை முடிவெடுங்கள்” என்று ஒலிபெருக்கியில் கத்தினர்.

அதற்கு அங்கிருந்த பாலஸ்தீன மக்கள், “நாங்கள் சிவிலியன்கள், பொதுமக்கள்” என திருப்பிக் கத்துகின்றனர்.

ஆனால், இஸ்ரேல் ராணுவ வீரர்கள் அவர்கள் அனைவரையும் அழைத்து வீட்டிற்கு வெளியே உட்கார வைக்கின்றனர். பின்னர் வீடுகளில் உள்ள பொருட்களை தீ வைத்து எரித்தனர். “எங்கள் வீட்டை ஏன் இப்படி தீ வைத்து எரிக்கிறீர்கள்?” என்று பாலஸ்தீனர்கள் கேட்கின்றனர்.

அதற்கு, “வீடுகளை மறந்து விடுங்கள். இனிமேல் அது எங்களுக்கு சொந்தமானது” என்று இஸ்ரேல் வீரர்கள் மிரட்டுகின்றனர்.

அங்கிருந்து ஆண்களின் கண்களும் கைகளும் கட்டப்பட்டு ஜட்டியுடன் உட்கார வைக்கப்படுகின்றனர். சித்திரவதை தொடங்குகிறது. இஸ்ரேல் ராணுவத்தின் துன்புறுத்தல்களை எதிர்த்து பேசியவர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

சக்தி வாய்ந்த ஆயுதங்களையும் குண்டுகளையும் வீசி காசா பகுதி கட்டமைப்புகளை அழித்து வந்த இஸ்ரேல் ராணுவம், பாலஸ்தீனர்களை சித்திரவதை செய்து பெரும் துயரத்துக்கு ஆளாக்கி வருகிறது.

உலகத்தின் கண் முன்பே பாலஸ்தீன இனம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த மண்ணின் சொந்தக்காரர்களான, பூர்வீக மக்களான பாலஸ்தீனர்கள் கடைசி மூச்சை விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இஸ்ரேலின் தாக்குதல்களை நியாயப்படுத்தி பெரும் ஊடகப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை இஸ்ரேல் மட்டுமல்ல, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் அரசுகளும் அவற்றின் ஆதரவு ஊடகங்களும் இப்பணியை மேற்கொண்டுள்ளன.



அதேநேரத்தில் இனப் படுகொலைக்கு எதிராக சக்தி வாய்ந்த சர்வதேச எதிர்ப்பு இயக்கம், லட்சக்கணக்கானோர் பங்கேற்கும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இஸ்ரேல் மீதான போர் குற்ற விசாரணையை சர்வதேச நீதிமன்றம் ஜனவரி 11ஆம் தேதி தொடங்கியுள்ளது.

“தலை முதல் கால் வரை ஒவ்வொரு துளையில் இருந்தும் ரத்தமும் அழுக்கும் சொட்டும்” முதலாளித்துவம் என்று காரல் மார்க்ஸ் கூறினார். அந்த முதலாளித்துவத்தின் கோர முகத்தை பாலஸ்தீனத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு உழைக்கும் வர்க்கத்தால்தான் முடிவுரை எழுத முடியும்.

தொடர்புக்கு: 9500001224



அருண் நெடுஞ்செழியன்

# அதானி – ஹிண்டன்பர்க்
# வாய்மை வென்று சொல்லும் வரலா

**அதானி குழுமத்தின் பங்கு வர்த்தக மோசடியை அம்பலப்படுத்திய ஹிண்டன்பர்க் அறிக்கையின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.**


இவற்றின் மீது கடந்த சில மாதங்களாக விசாரணை நடைபெற்று வந்த நிலையில், ஜனவரி மூன்றாம் தேதி உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதில் அதானி மீதான ஹிண்டன்பர்க் அறிக்கையை அமலாக்கத்துறை, புலனாய்வு அமைப்பு போன்ற சிறப்பு புலனாய்வு அமைப்புகள் ஆய்வு செய்ய வேண்டிய தேவையில்லை என்றும் அது தங்களது அதிகார எல்லைக்கு மீறியது என்றும், இந்த விவகாரத்தை பங்குச் சந்தை ஒழுங்குமுறை ஆணையமான செபியே விசாரிக்கும் என "வரலாற்று சிறப்பு"மிக்கத் தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பை வரவேற்றுள்ள அதானி, வாய்மை வென்றுள்ளது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட எதிர்கட்சிகள் ஜனநாயகம் செத்துவிட்டது என தீர்ப்பை விமர்சித்துள்ளன.

இந்தத் தீர்ப்பு விவரங்களைப் பார்க்கையில், பாஜக ஆட்சியில் நீதி வழங்குகிற நீதிமான்களின் தீர்ப்புகளில் உள்ள முரண்கள் பளிச்சென தெரிகிறது. அதாவது, ராமர் கோயில் வழக்கில் பாபர் மசூதிக்கு முன்பு அங்கு ராமர் கோயில் இருந்ததற்கான தொல்லியல் சான்று, கல்வெட்டு ஆதாரம் என எந்தவொரு ஆதாரமும் இன்றி மக்களின் கூட்டு மனசாட்சி என்ற பெயரில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், இந்த முறை அதானி மீதான புகார்களை விசாரிக்கிற செபி மற்றும் செபி விசாரணையை கண்காணிக்கும் நிபுணர் குழு மீதான ஆதாரப்பூர்வ குற்றச்சாட்டுகளை, "தாமதமானவை" என்றும் "நம்பகத்தன்மை அற்றவை" என்றும் கூறி மனுதாரர்களின் வாதங்களை தள்ளுபடி செய்ததுதான் முரண்.

**அதானி வழக்கு கடந்த வந்த பாதை:**

முன்னதாக 2023, ஜனவரியில் அதானி குழுமம் மீதான ஹின்டன்பர்க் நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கை நாட்டின் தலைப்புச் செய்தியானது. அதானி குழுமத்தின் பங்கு வர்த்தக மோசடி, வரி ஏய்ப்பு முறைகேடு உட்பட பொருளாதார முறைகேடுகளை ஹின்டன்பர்க்கின் ஆய்வறிக்கை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியது. அதானி குழுமத்தையும் அதானிக்கு துணை போகிற பாஜகவையும் நாட்டின் எதிர்கட்சிகள், ஜனநாயக அமைப்புகள், பத்திரிகையாளர்கள், கடுமையாக விமர்சித்தன. இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை மற்றும் புலனாய்வு அமைப்பு போன்ற விசாரணை அமைப்புகள் உடனடியாக விசாரணை செய்ய வேண்டும் என்றன. இத்தனை காலமாக விசாரணை வளையங்களில் இருந்து தப்பவைக்கப்படுகிற அதானி, இம்முறையும் மோடி அரசால் பாதுகாக்கப்படுவாரா என்ற சந்தேகம் அனைவரிடத்திலும் எழுந்தது. இந்த சந்தேகத்தை போக்கும் விதமாக, அதானி மீது ஒரு தூசி திரும்பும் பட்டு விடாமல் மோடி அரசு காப்பற்றியதோடு, இந்த விவகாரம் குறித்து ஒரு வார்த்தையும் பேசாமல் கள்ள மௌனம் காத்தது.

பின்னர் ஒரு வழியாக அதானி குழுமத்தின் பங்கு வர்த்தக மோசடிகளை விசாரித்து அறிக்கை அளிக்கக் கோரி, பங்கு வர்த்தகங்களை ஒழுங்கு செய்கிற செபி அமைப்புக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் அங்கும் ஒரு சிக்கல் வந்தது. அதானி குழுமத்தின் முறைகேட்டை விசாரிக்கிற செபி அமைப்பின் "நேர்மையின்" மீதும் செபியின் நம்பகத்தன்மை மீதும் பத்திரிகைகள் கேள்வி எழுப்பின. ஏனெனில் அதானி குழும முறைகேடுகள் நடைபெற்ற காலத்தில் செபியின் தலைவராக யு.சி.சின்ஹா பதவி வகித்தார். தற்போது அவர் அதானி குழுமத்தின் ஊடக நிறுனமான என்டிடிவியின் அலுவல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.








இப்படியாக சிக்கல் மேல் சிக்கல் வந்த நிலையில்தான் இடையில் அதானியின் பங்குச்சந்தை முறைகேடுகளை ஓசிசிஆர்பி (OCCRP) அறிக்கை அம்பலப்படுத்தியது. ஓசிசிஆர்பி (OC-CRP-Organized Crime and Corruption Reporting Project) என்பது கார்ப்பரேட் நிறுவனங்களின் ஊழல்களை ஆய்வு செய்து அம்பலப்படுத்தும் புலனாய்வு அமைப்பாகும். இந்த அமைப்பு 2023 ஆகஸ்ட் 31 அன்று இங்கிலாந்திலிருந்து வெளிவரும் 'தி கார்டியன்' மற்றும் 'பைனான்சியல் டைம்ஸ்' பத்திரிகைகளில் அதானி குழுமத்தின் பங்குச்சந்தை மற்றும் வரி ஏய்ப்பு முறைகேடுகளை அம்பலப்படுத்தி அறிக்கை வெளியிட்டது.

அதில், 2013 முதல் 2018 ஆம் ஆண்டு வரை வரி விலக்கு சலுகை நாடான மொரிஷியசில் இருந்து எமர்ஜிங் இந்தியா ஃபோகஸ் ஃபண்ட் (ஹமிமிதிதி) மற்றும் ஈஎம் ரிசர்ஜிங் ஃபண்ட் (ஹிவிஸிதி) ஆகிய இரண்டு நிதியங்கள் மூலமாக அதானி குழுமத்திற்கு பல நூறு கோடி ரூபாய் முதலீடு வந்துள்ளது. இந்த முதலீட்டை முன்வைத்து பங்குச்சந்தையில் அதானி குழுமத்தின் பங்குகளின் விலை செயற்கையாக அதிகரித்துக் காட்டப்பட்டு வர்த்தகம் செய்து லாபம் ஈட்டியதாக குற்றம் சாட்டியது. உண்மையாக எந்தவொரு தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் ஷெல் நிறுவனங்கள் மூலமாக அதானி குழும பங்குகளின் விலைகள் செயற்கையாக அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன என அறிக்கை விமர்சித்தது.

**அதானியை காப்பாற்றிய உச்சநீதிமன்றத் தீர்ப்பு:**


ஒரு பக்கம் ஹிண்டன்பர்க் அறிக்கை மறுபக்கம் ஓசிசிஆர்பி (ஸிசிசிஸிறி) அறிக்கை என அதானியை சுற்றி வளைக்க, அதானி குழுமத்துக்கும் மோடி அரசுக்கும் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. இந்த நிலையில்தான் ஏதாவது செய்தாகவேண்டும் என்ற சூழலில் அதானி குழுமத்தின் முறைகேட்டை விசாரிக்கிற செபி அமைப்பின் விசாரணையை, கண்காணிக்க முன்னாள் நீதிபதி ஏ.எம். சப்ரே தலைமையிலான ஆறு பேர் கொண்ட நிபுணர் குழுவை உச்சநீதிமன்றம் நியமித்தது. நீதிமன்றத்தின் இந்த நடவடிக்கையை விமர்சித்த ஜனநாயக சக்திகள், நிபுணர் குழுவுக்கும் அதானி குழுமத்திற்கும் இடையில் இருந்த "பரஸ்பர நல்லுறவை' சுட்டிக்காட்டியது.

குறிப்பாக நிபுணர் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான, பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தலைவரான ஓ.பி.பட், அதானியுடன் தொடர்புள்ள முன்னணி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனமான கிரீன்கோவின் தலைவராகப் பணியாற்றி வருவதையும், மும்பை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக சமீபத்தில் நியமிக்கப்பட்டமற்றொரு குழு உறுப்பினரான வழக்கறிஞர் சோமசேகர் சுந்தரேசன் மீதான முறைகேடுப் புகார்களையும் மனுதாரர்கள் உச்சநீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினர். நிபுணர் குழுவும் வேண்டாம், செபியும் வேண்டாம் அமலாக்கத்துறையே விசாரணை செய்ய வேண்டும் என மனுதாரர்கள் வாதிட்டனர். ஆனால் இந்த வாதங்கள் யாவையும் தாமதமானவை என்றும் ஆதாரமற்றவை எனவும் உச்சநீதிமன்ற நீதிபதி சந்திர சூட் தள்ளுபடி செய்தார். ஓசிசிஆர்பி (OCCRP) அறிக்கையையும் நீதிமன்றம் நிராகரித்தது. இறுதியில் செபியே விசாரிக்கட்டும் என தீர்ப்பளித்துவிடார்.

பாவம் மோடியின் அமலாக்கத்துறை துறை தான் என்ன செய்யும்? எதிர்க்கட்சிகளை மிரட்டுவதற்கு சோதனை செய்யப் போவதா? ஏழை விவசாயிகளை அச்சுறுத்தி மிரட்டுவதற்குப் போவதா? மனுதாரர்களுக்கு இவையெல்லாம் தெரியாமல் போனது ஏமாற்றம்தான். நீதிமன்ற நேரத்தையும் வீணடிக்கத் தேவை ஏற்பட்டிருக்காது.



# வழக்கில் தீர்ப்பு
# ு விட்டதாக
# ற்றுக் கேடு




## "நீதிமன்றம்" விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட அமைப்பா?

சட்ட ஒழுங்கை காப்பாற்றி நிலைநாட்ட வேண்டிய ஒன்றிய அரசு, அரசியல் சாசனத்திற்கு எதிரான மதச்சார்பு அரசாகவும் கார்பரேட் குழுமங்களின் நலன் விரும்பியாகவும் செயல்படும்போது நீதிமன்றமே ஜனநாயக குடியரசைக் காப்பதற்கான இறுதிப் புகலிடமாக மாறுகிறது. குறிப்பாக நடுத்தர வர்க்க மக்கள், முதலாளித்துவ ஜனநாயக சக்திகள் ஆகியோருக்கு நீதிமன்றம், எந்தவொரு அரசியல், வர்க்க சார்புமின்றி அப்பழுக்கற்ற நீதி அமைப்பாக செயல்படுகிறது என்ற எண்ணம் உண்டு. ஆனால் கம்யூனிஸ்ட்களைப் பொறுத்தவரைக்கும் "நீதிமன்றத்தை" இந்த முதலாளித்துவ அமைப்பின் உறுப்பாகத்தான் பார்க்கின்றனர். குறிப்பாக தொழிலாளர் போராட்டங்கள், அரசுக்கு எதிரான போராட்டங்கள் என "வர்க்க மோதல்கள்" முற்றும் போது, நீதிமன்றத்தின் ஊடாக, ஒரு வர்க்க சமரசத்தை ஆளும் வர்க்கம் ஏற்படுத்துகிறது. அரசுக்கு எதிரான உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வை மழுங்கடிக்கவோ அல்லது அரசு மீதான மக்களின் அவநம்பிக்கையை போக்கவோ நல்ல தீர்ப்புகளை நீதிமன்றம் வழங்க வேண்டியுள்ளது.

உதாரணமாக, தற்போது வெளிவந்துள்ள பில்கிஸ் பானு வழக்கின் மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் கூறலாம். நாட்டையே உலுக்கிய கொடூர கொலையை செய்தவர்களை "நல்லெண்ண" அடிப்படையில் தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பாக, குஜராத் மாநில அரசு 2022 ஆகஸ்ட் 15ஆம் தேதி அன்று குற்றவாளிகள் அனைவரையும் விடுவித்தது. இந்தக் கொடுமையை பொறுக்க முடியாத பில்கிஸ் பானு, உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதிகள் பி.வி.நாகரத்னா மற்றும் உஜ்ஜல் புயான் ஆகியோர் குற்றவாளிகளை முன் விடுதலை செய்த குஜராத் அரசின் உத்தரவை ரத்து செய்தனர்.

இந்த தீர்ப்பை தற்போது ஜனநாயகவாதிகள் கொண்டாடி வருகின்றனர். இத்தீர்ப்பு பாராட்டப்படப்பட்ட வேண்டிய ஒன்றுதான்.

இதுபோல மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில், தீர்ப்பளித்த நீதிபதி குன்காவை உதாரணம் கூறலாம். இவையெல்லாம் அத்தி பூத்தாற்போல் சில தனிப்பட்ட நீதிபதிகளின் "அறவியல்" பண்புகளால் பத்தாண்டுகளுக்கு ஒன்றிரண்டு தீர்ப்புகள் நியாயமாக வழக்கப்படும். ஆனால் பெரும்பாலான சூழலில் அரசுக்கு எதிரான அல்லது அரசை நெருக்கடிக்குள் தள்ளுகிற முறையில் நீதிமன்றம் எந்தவொரு தீர்ப்பும் வழங்கிட முன்வராது என்பதை கவனிக்கவேண்டும்.

பாஜக ஆட்சிக்கு வந்த பின்னர் வெளிவந்த முக்கிய தீர்ப்புகள் முறையே அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு கிராமப் பஞ்சாயத்து பாணியில் நிலத்தை பிரித்துக் கொடுத்து தீர்ப்பு வழங்கியது. அமித்ஷா மீதான சொராபுதீன் ஷேக் போலி என்கவுண்டர் கொலைக் குற்ற வழக்கிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டது என சொல்லிக் கொண்ட போகலாம்.

"உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம், உண்மை வென்றுவிட்டது. வாய்மையே வெல்லும். எங்களுக்கு ஆதரவு அளித்தவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்துக்கான எங்களின் பணிவான பங்களிப்பு தொடரும். ஜெய் ஹிந்த்" என்ற அதானியின் அறிக்கையை எதிர்ப்போர் எல்லாம் மோடி ஆட்சியில் இந்தியாவின் வளர்ச்சிக்கு எதிரானவர்கள் ஆகிவிட்டார்கள். வாய்மையா? அப்படியென்றால் என்ன? கிலோ என்ன விலை? என கேட்கிற அதானி போன்ற கார்பரேட் முதலாளிகளை எல்லாம் முறைகேடுப் புகாரில் தப்பவைக்கப்பட்டு "வாய்மை வென்றுவிட்டது" என அறிக்கை விடுகிற வரலாற்று கேடான காலத்தில் வாழ்கிறோம் என்பது மட்டும் நிதர்சனமான உண்மை.

தொடர்புக்கு: 9842391963



# எங்களை ஒரே குழியில் அடக்கம் செய்க

எந்தவித பாதுகாப்பும், உரிமைகளும் இல்லாத தொழிலாளர்கள போராடத் தயாரானார்கள். கோவை பஞ்சாலை தொழிலாளர் கோரிக்கைகளான சம்பளம் உயர்வு, பணி நிரந்தரம், வேலை நேரம் குறைப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டங்களை முன்னெடுக்க 1937இல் கோவை மில் தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

அதன் தலைவராக என்.ஜி.ராமசாமி தேர்வு செய்யப்பட்டார். அவர் அப்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தொழிலாளர் தொகுதியில் இருந்து சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் கட்சி ஆட்சி பொறுப்பு ஏற்றது. இந்த நிலையில் பஞ்சாலை தொழிலாளர் போராட்டங்கள் வீறு கொண்டு நடைபெற்றுக் கொண்டிருந்தன.

போராட்டங்களை கைவிடக் கூறினார் சட்டமன்ற உறுப்பினர் ராமசாமி. கம்யூனிஸ்ட் தொழிலாளர்கள் போராட்டங்களை கைவிட முடியாது என கூறி போராட்டத்தை தீவிரப்படுத்தினர். சங்கத்தில் பிளவு ஏற்றபட்டது. எச்எம்எஸ் சங்கத்தை உருவாக்கினார்கள். கோவை சோமசுந்தரா, காளீஸ்வரா, முருகன், லட்சுமி மில் உள்ளிட்ட தொழிலாளர்கள் ஏஐடியுசின் தலைமையின் கீழ் அணி திரண்டனர். லட்சுமி மில் போராட்டம் ஜீவா தலைமையில் நடைபெற்றது. ரங்கவிலாஸ் மில் உள்ளிட்ட பஞ் சாலைகளில நடைபெற்ற கடுமையான போராட்டம் புதிய கட்டத்தை அடைந்தது.

அன்றைய பஞ்சாலை முதலாளிகள் அடியாட்களை வைத்து குண்டர் படைகளை அமைத்து செங்கொடி சங்கத்தை உடைப்பது, முன்னணி ஊழியர்களை தாக்குவது,போராட்டத்தை நசுக்குவது போன்ற மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ரங்கவிலாஸ் மில் முதலாளியின் குண்டர் படைத் தலைவன் தான் பொன்னான்.

ரங்க விலாஸ் மில்லில் பணிபுரிந்த சின்னியம்பாளையம் பகுதியைச் சேர்ந்த சின்னையன்,ராமையன், ரங்கண்ணன், வெங்கடாசலம் ஆகிய தோழர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் மீதும் தலைவர்கள் மீதும் மிகுந்த பற்று கொண்டவர்கள். மில்லில் நடைபெற்ற அராஜகத்தையும் அக்கிரமங்களையும் தாங்க முடியாது பொன்னானுக்கு பாடம் புகட்ட நினைத்தார்கள்.

1944 ஆண்டு ஒருமாலை நேரத்தில் மில்லில் பணி முடித்துவிட்டு பொது இடத்தில் தோழர்கள் பேசிக் கொண்டிருந்தனர். அந்த வழியில் வந்த குண்டர் படை தலைவன் பொன்னானுக்கும், தோழர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பில் முடிந்தது.

அடுத்த நாள் காலையில் பொன்னான் இறந்து விட்டான் என்ற செய்தி வந்தது. தோழர்கள் சின்னையன், ராமையன், ரங்கண்ணன், வெங்கடாசலம் ஆகிய தொழிலாளர்கள் மீது காவல்துறை வழக்கு தொடுத்தது. ரங்க விலாஸ் மில் நிர்வாகம் பொன்னானுக்கு ஆதரவாக வழக்கு நடத்தியது.

இந்த நிலையில் சின்னியம்பாளையம்தோழர்கள் சின்னையன், ரங்கண்ணன், ராமையன், வெங்கடாசலம் ஆகிய நான்கு தோழர்களுக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்கு லண்டன் பிரிவியூ கவுன்சிலுக்கு முறையீடு செய்யப்பட்டது.அதன் தீர்ப்பு மரண தண்டனையை உறுதி செய்தது . தூக்கு தண்டனை பெற்ற தொழிலாளர்கள் நால்வரும் எங்களை ஒரே குழியில் அடக்கம் செய்ய வேண்டும் என வேண்டுகோளும் விடுத்தனர்.

1946 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி காலை 4:30 மணிக்கு நால்வருக்கும் கோவை சிறையில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது. தூக்கிலிடப்பட்ட நான்கு தோழர்களின் உடல்களும் சின்னியம்பாளையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. நான்கு தோழர்களின் உடல்களும் ஒரே குழியில அடக்கம் செய்யப்பட்டனர்.

கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களின் தியாக திருவுருவங்களாக வரலாற்றில் இன்றும் நிலைத்து நிற்கின்றனர். இன்றும் தமிழ்நாட்டு தொழிலாளி வர்க்கத்தின் நெஞ்சங்களில் தியாக தீபங்களாக தோழர்கள் சின்னையன், ராமையன், ரங்கண்ணன்,வெங்கடாசலம் ஆகியோரின் புகழ் ஓங்கி நிற்கிறது .

**சின்னியம்பாளையம் தியாகிகள் தினம் ஜனவரி 08**

–இரா.துரைசாமி

# சின்னியம்பாளையம் தியாகிகளுக்கு அஞ்சலி

சின்னியம்பாளையத்தில் தியாகிகளுக்கு, அஞ்சலி செலுத்தும் வகையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரு கட்சிகளும் இணைந்து நடத்திய பேரணி, வெங்கடாபுரம் டீச்சர்ஸ் காலனியில் இருந்து புறப்பட்டு தியாகிகள் மேடையில் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் நா. பெரியசாமி பேசினார்.

இந்த கூட்டத்திற்கு சிபிஎம் ஒன்றிய செயலாளர் வி.பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். சிபிஐ சூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ். ராமசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் வழக்கறிஞர் கே.சுப்பிரமணியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி.மௌனசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.பத்மநாபன், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட செயலாளர் யூ.கே. சிவஞானம், சிஐடியு மாவட்ட பொதுச் செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஏ.சந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் காமராஜ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எம்.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் வி.எஸ்.சுந்தரம், கே.எம். செல்வராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# நீதி, சமூக நீதி காக்கும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள்

## இரா.முத்தரசன் வரவேற்பு



நீதி, சமூக நீதி காக்கும் உச்சநீதிமன்றத்தின் இரண்டு தீர்ப்புகளுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வரவேற்பு தெரிவித்து தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கடந்த 2002 ஆம் ஆண்டில் குஜராத்தில் நடந்த மதவெறி தாக்குதலில் பில்கிஸ் பானு, அவரது மூன்று வயது குழந்தை உட்பட 14 பேர் கொடூரப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மத்திய புலனாய்வு துறையின் மும்பை நீதிமன்றத்தால் 11 குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கியது.

ஆயுள் தண்டனைக்கு உட்பட குற்றவாளிகள் அனைவரும் தண்டனை காலம் முடியும் முன்பு, குஜராத் மாநில பாஜக அரசால், கடந்த 2023 ஆகஸ்ட் 15 அன்று விடுதலை செய்யப்பட்டனர். குஜராத் அரசின் விடுதலை உத்தரவை எதிர்த்து, பில்கிஸ் பானுவும் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் உட்பட மாதர் அமைப்புகளும் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தன. இந்த முறையீடுகளை விசாரித்த உச்ச நீதிமன்றம் 08.01.2024 அன்று குஜராத் மாநில பாஜக அரசின் உத்தரவை ரத்து செய்து, குற்றவாளிகள் சிறைக்கு செல்ல வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது.

இதே போல் முன்னேறிய சாதியினரில் பின்தங்கிய பிரிவினருக்கு 10 சதவீதம் ஒதுக்கீடு வழங்குவது மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டது என்ற தீர்ப்பு வழங்கி, தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்கள் முன்னேறி சமூகத்தின் பின்தங்கிய பிரிவினருக்கு 10 சதவீத ஒதுக்கீடு வழங்காது என்ற எடுத்த கொள்கை முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பு வழிவகை செய்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் நீதி, சமூக நீதி காக்கும் இரண்டு தீர்ப்புகளையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

புதிய முதலீடுகளை ஈர்த்து

# வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிக்கு சிபிஐ வரவேற்பு




புதிய முதலீடுகள் ஈர்த்து – வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வரவேற்பு தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

தமிழ்நாடு அரசு 07.01.2024 மற்றும் 08.01.2024 தேதிகளில் நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. இதன் மூலம் ரூ.6 லட்சத்து 64 ஆயிரம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு, சுமார் 30 லட்சம் புதிய வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது

முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மீது தனி கவனம் செலுத்தி அவைகளை நடைமுறைப்படுத்த சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பது நம்பிக்கையூட்டும் நடவடிக்கையாகும்.

உலக முதலீட்டாளர் மாநாடு வெற்றிகரமாக அமைய முதலமைச்சர் நேரடியாக அவர்களை சந்தித்து உரையாடியதும், தொழில்துறை அமைச்சர், நிதியமைச்சர் உள்பட உயர் அதிகாரிகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, அவர்களது எதிர்பார்ப்புகளை அறிந்து கொண்டு, அழைத்ததும் வெற்றிக்கு அடிப்படையாகும். ஒவ்வொரு ஒப்பந்தமும் கால வரம்பு நிர்ணயித்து நிறைவேற்றுவதில் முனைப்பு காட்ட வேண்டும்.

தமிழ்நாடு அரசு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி முன்னேற முதலமைச்சரும், அரசும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டி, வரவேற்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

விவசாயிகளை அச்சுறுத்திய

# அமலாக்கத்துறை அலுவலர் மீது வன்கொடுமை வழக்கு பதிய வேண்டும்

## எம்.மாசிலாமணி வலியுறுத்தல்!

விவசாயிகளை அச்சுறுத்திய அமலாக்கத்துறை அலுவலர் மீது வன்கொடுமை வழக்கு பதிய தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வலியுறுத்தல். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

சேலம் மாவட்டம் ஆத்தூர் இராமநாயக்கன்பாளையத்தில் உள்ள கிருஷ்ணன் (70), கண்ணையன் (65) சகோதரர்களான எளிய சிறு விவசாயிகளுக்கு அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பி உள்ளது என்பது அதிர்ச்சியாகும். அதுவும் அவர்களின் சாதியை குறிப்பிட்டு அனுப்பி உள்ளது என்பது வன்மையாக கண்டிக்க கூடியது.

மூதாதையர்கள் காலம் முதல் இவர்களுக்கு சொந்தமான 6.5 ஏக்கர் நிலங்களை பயன்படுத்தி சாகுபடி செய்து வந்த நிலையில், கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் இவர்களின் நிலத்திற்கு அருகே சாகுபடி செய்து வரும் பா.ஜ.க.. வில் உள்ள குணசேகரன் என்பவர் இந்த நிலத்தை அபகரிக்க பல்வேறு வழிகளில் நடவடிக்கை எடுத்து தொந்தரவு செய்து வருகிறார். அமலாக்கத்துறை மூலம் தற்போது சாதியை குறிப்பிட்டு நோட்டீஸ் அனுப்பபட்டுள்ளது. அமலாக்கத்துறைக்கும், விவசாயத்திற்கும், என்ன சம்பந்தம்?


விவசாயிகளின் சாதியை குறிப்பிட்டு நோட்டீஸ் அனுப்பபட்டுள்ளதால் வன்கொடுமை சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் காவல்துறையில் புகார் அளித்துள்ளனர்.

இந்த இரண்டு விவசாய குடும்பங்களையும் தொடக்கம் முதல் பாதுகாத்திட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும் துணை நின்று உதவி வருகிறது.

நில உரிமையையும், கௌரவ வாழ்க்கையையும், உரியபாதுகாப்பை பெறவும், அமலாக்கத்துறையின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது வன்கொடுமை வழக்கு போடவும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தொடர்ந்து போராடும் என்று பி.எஸ். மாசிலாமணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மோடியின் 10 கோடி வேலை புள்ளிவிவரம் ஒரு கண்துடைப்பு நாடகம்

## பினாய் விஸ்வம் எம்பி குற்றச்சாட்டு



வேலைவாய்ப்புக் குறித்த தொழிலாளர் அமைச்சரகத்தின் புள்ளிவிவரம் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக் குழு செயலாளர் பினாய் விஸ்வம் எம்பி வெளியிட்ட அறிக்கை வருமாறு

ஆண்டுக்கு இரண்டுகோடி வேலைகளை வழங்குவதான பிரதமர் மோடியின் பொய்யான வாக்குறுதி காலி டப்பா என்பது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சரகப் புள்ளிவிவரத் தரவுகள் மூலமே முன்னுக்கு வந்துள்ளது.

தேசிய வேலை தேடி தரும் சேவை இணையதளமானது, தகவல் தொடர்பு தொழில்நுட்ப அடிப்படையில் தேசிய மட்டத்திலான இணையதளமாகும். இதில் வேலை தேடுநர், வேலை வழங்குநர், திறன் மேம்பாடு வழங்குநர், பணி குறித்த ஆலோசனை வழங்குநர் முதலானவர்கள் பதிவு செய்ய முடியும். இந்த இணையதளத்தில் 3 கோடியே 63 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் வேலை தேடி பதிவு செய்துள்ளனர். ஆனால் இதில் கடந்த 9 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை, வேலை தேடிப் பதிவு செய்தவர் எண்ணிக்கையில் பாதிக்குச்சற்று அதிகமாக மட்டுமே இருந்து வருகிறது. காலிப் பணியிடங்களைவிட வேலை தேடுவோர் எண்ணிக்கை மிக அதிகம்.

மேலும், கிடைக்கும் புள்ளிவிவரம், வெளியிடப்பட்ட காலியிடங்கள் பற்றி மட்டுமே. இது எவ்வகையிலும் தேசிய போர்டல் மூலம் வேலை பெற்றோர் எண்ணிக்கையை உறுதிப்படுத்தாது. ஏனெனில் இறுதியில் வேலைக்கு எடுக்கப்பட்டோர் எண்ணிக்கையை இந்த இணையதளத்தில் உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயம் இல்லை.

மேலும், அதே வேலையை இந்த இணையதளத்தில் மீண்டும் வெளியிடுவதும் கூட தற்போதைய காலிப்பணியிடங்கள் எண்ணிக்கைக்கு ஒரு காரணமாகும். இதனால் உண்மையான காலி யிடங்களின் எண்ணிக்கை இன்னும் குறைவாக இருக்கக் கூடும். வேலைக்கு எடுக்கப்பட்டோர் குறித்த உண்மையான உறுதிப்படுத்தப்பட்ட தரவுகள் பற்றி தெரியாமல், இயக்கவழி செயல் திட்ட அமைலாக்கத்தின் அல்லது இணையதளச் சேவையின் வெற்றி என்பது கேள்விக்குறியாகவே நீடிக்கிறது. எனினும், அமைச்சரகம் மூலம் கிடைக்கச் செய்யப்பட்ட தரவுகள், வேலைவாய்ப்பை உண்டாக்குவதில் அரசு தோல்வி அடைந்ததையே சுட்டிக் காட்டுகிறது. வேலைவாய்ப்பை உண்டாக்கும் மோடியின் உறுதிமொழி சும்மா உதார் விட்ட 'ஜும்லா'.

தேசிய மட்டத்திலான வேலை தேடிதரும் சேவை இணையதளம் மூலம் 9 ஆண்டுகளில் 2கோடி காலி யிடங்களைக்கூட உறுதிப்படுத்த முடியவில்லை என்றால், மோடி வாக்களித்த மிச்சம் 16 கோடி வேலைகள் எங்கே? இந்த நாட்டின் இளைஞர்கள் மிகக் கடுமையான வேலையில்லா திண்டாட்டம் காரணமாக விரக்தி அடைந்துள்ளனர். வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் பிரச்னையில் அரசு தீவிரமான அக்கறை கொள்ள வேண்டிய தருணமிது.

பிரதமர் மோடியின் கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான மாடல் பொருளாதாரம், நிச்சயம் இளைஞர்களின் எதிர்பார்ப்பு ஏக்கங்களை நிறைவேற்றாது என்பது நிதர்சனம். சிறுகுறு நடுத்தர நிறுவனங்களில் முதலீடு செய்யும் பொதுத்துறை பிரிவைப் புத்துயிர் ஊட்டுவதன் மூலமே நிலையான வேலைகளை உண்டாக்க முடியுமே தவிர, மோடி முன்னுரிமை தரும் அதானி வகையிலான வளர்ச்சி வேலைவாய்ப்புகளை உருவாக்காது என்று கூறியுள்ளார்.

# பஞ்சமி நில விவரங்களை அரசு வெளியிட வேண்டும்!

## ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் வலியுறுத்தல்!



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மேற்கு மண்டல பேரவைக் கூட்டம் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாநில பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் அரசியல் விளக்க உரையாற்றினார். மேற்கு மண்டல பொறுப்பாளர் அ.அசரப்அலி அமைப்பு நிலை குறித்து பேசினார்.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் பா.தினேஷ், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், கட்சியின் திருச்செங்கோடு நகரச் செயலாளர் எஸ்.சுகுமார், ஒன்றிய துணைச் செயலாளர் முரளிகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சியில் சாணார்பாளையம் அருகே நகராட்சி மயானம் உள்ளது. இந்த மயானத்தில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கான இடத்தில் நகரத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டியுள்ளனர். இதனால் துர்நாற்றம் வீசுகிறது. இது குறித்து பல முறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மயானத்தை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்தும் வகையில் மீட்டெடுக்க நகராட்சி நிர்வாகம், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தில் தலித் மக்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட பஞ்சமி நிலங்கள் தனி நபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் பஞ்சமி நிலங்கள் எந்தெந்த கிராமங்களில் உள்ளன, எவ்வளவு உள்ளன என்கிற விவரங்களை தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் வெளியிட வேண்டும் என தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமைக்கத்தின் மேற்கு மண்டல பேரவைக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட கோவை, கரூர் நாமக்கல் மாவட்டங்களில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கருக்கு பொது வெளியில் இதுவரை சிலைகள் அமைக்கப்படவில்லை. உடனடியாக இங்கு அரசு சிலை அமைக்க வேண்டும்.

### பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாததால்

# போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

போக்குவரத்து ஊழியர்கள் வேலைநிறுத்தம் திட்டமிட்டபடி ஜன.9 அன்று தொடங்கியது.

◆ காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்,

◆ போக்குவரத்துக் கழகங் களின் வரவுக்கும் செலவுக்கும் வித்தியாசத் தொகையை அரசு பட்ஜெட்டில் ஒதுக்கி வழங்க வேண்டும்,

◆ ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 100 மாதங்களாக வழங்கப்படாமல் உள்ள அகவிலைப் படி உயர்வை வழங்க வேண்டும்,

◆ தேர்தல் வாக்குறுதிப்படி புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட வேண்டும்,

◆ 15வது ஊதிய ஒப்பந்த பேச்சு வார்த்தையை உடனே தொடங்க வேண்டும்,

◆ வாரிசு பணி நியமனங்களை மேற்கொள்ள வேண்டும்

ஆகிய 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐடியுசி, சிஐடியு உள்ளிட்ட சங்கங்கள் வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது.

இதனை வலியுறுத்தி டிச.19 ஆம் தேதி அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் ஓய்வு பெற்றோர் நல சங்கங் களின் கூட்டமைப்பு,



அண்ணா தொழிற் சங்க பேரவை (ஏடிபி) தலைமை யிலான கூட்டமைப்பு ஆகியவை தனித் தனியாக வேலை நிறுத்த அறிவிப்பு வழங்கின. இதையடுத்து தொழிலாளர் தனி இணை ஆணையர் முன்னிலையில் நடைபெற்ற இரண்டு சுற்று பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் இல்லை.

இதையடுத்து ஜன.9 முதல் காலவரை யற்ற வேலைநிறுத்தத்தை தொழிற்சங்கங்கள் அறிவித்தன. இதையடுத்து ஜன.5 அன்று போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேசினார். தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளை நிறை வேற்ற நிதித்துறையுடன் பேசி முடிவெடுக்க ஒரு நாள் கால அவகாசம் கோரினார். ஜன.7 அன்று மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறும் என்றார்.

அதன்படி அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. இந்த நிலையில் தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் திங்களன்று (ஜன.8) மூன்றாவது சுற்று சமரச பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் வேலை நிறுத்தம் தொடர்கிறது.

## போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஆதரவாக

### ஜனவரி 11ல் ஏஐடியுசி ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் 9.01.2023 காலையிலிருந்து காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அஇஅதிமுக ஆட்சி காலத்தில் இருந்து நிலுவையில் உள்ள கோரிக்கைகள் தான் இவை என்றாலும் கூட, யார் காரணம் என்ற விவாதத்திற்கு செல்லாமல் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு முழு முயற்சி எடுக்க வேண்டும். இதனை வலியுறுத்தி

ஜனவரி 11 அன்று ஏஐடியுசியுடன் இணைக்கப்பட்ட சங்கங்கள் போக்குவரத்து தொழிலாளர்கள் போராட்டத்திற்கு ஆதரவாக, அரசின் கவனத்தை ஈர்க்க மாவட்டத் தலைநகரங்களில், ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு மாநில பொதுச் செயலாளர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### போக்குவரத்து தொழிலாளர் பிரச்சினையில்

# முதலமைச்சர் தலையிட்டு தீர்வுகாண வேண்டும்

**இரா.முத்தரசன் வலியுறுத்தல்**

போக்குவரத்து தொழிலாளர் பிரச்சினையில் முதலமைச்சர் நேரடியாக தலையிட்டு தொழிற் சங்க தலைவர்களை அழைத்து பேசி தீர்வுகாண வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வலியுறுத்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நீண்ட காலமாக தீர்வு காணப்படாமல் நீடிக்கும் கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 2023 டிசம்பர் 19 ஆம் தேதி தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த அறிவிப்பை அரசுக்கு வழங்கியுள்ளன.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத்துறை அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தினாலும், அதில் தீர்வு எதுவும் ஏற்படாதது, தொழிலாளர்களை வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு நெட்டித் தள்ளியுள்ளது. தனது ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு பல்வேறு தீமைகள் செய்து வஞ்சித்த அஇஅதிமுக, இந்த நியாயமான போராட்ட சூழலை தனது அரசியலுக்காக பயன்படுத்துகிறது.

தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய அகவிலைப்படியை நிலுவையிலேயே வைத்திருப்பது, ஓய்வூதியர்களையும் இது பாதிப்பது, சட்டபூர்வமாக வழங்க வேண்டிய பணிக்கொடை மற்றும் ஓய்வு கால நலன்களை வழங்குவதில் பெரும் காலதாமதம் ஏற்படுவது போன்ற நியாயமற்ற நடைமுறைகள், இந்த ஆட்சியிலும் தொடர்வதற்கு அரசு அனுமதிக்கக் கூடாது.

நெருக்கடியான நிலையில் போக்குவரத்து தொழிலாளர் பிரச்சினையில் முதலமைச்சர் நேரடியாக தலையிட்டு, தொழிற்சங்க தலைவர்களை அழைத்துப் பேசி தீர்வு காண வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தமிழ்நாடு அரசு கோரும் தேசிய பேரிடர் நிவாரண நிதியை முழுமையாக வழங்க வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாக குழு வலியுறுத்தல்

தமிழ்நாடு அரசு கோரும் தேசிய பேரிடர் நிவாரண நிதியை முழுமையாக வழங்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாக குழு வலியுறுத்தி உள்ளது. இது குறித்து மாநில செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் 05.01.2024 அன்று சென்னையில் உள்ள மாநில கட்சி அலுவலகத்தில் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் (முன்னாள் எம்.எல்.ஏ) தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் கே.நாராயணா, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு. வீரபாண்டியன், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம். மூர்த்தி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் பி.பத்மாவதி, க.சந்தானம், வகிதா நிஜாம் வை.சிவபுண்ணியம், எம்.ரவி, டி.ராமசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் டி. ராமசந்திரன் (தளி), க மாரிமுத்து (திருத்துறைப்பூண்டி) உள்ளிட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1 . தமிழ்நாடு அரசு கோரும் தேசிய பேரிடர் நிவாரண நிதியை முழுமையாக வழங்குக**

கடந்த 2023 நவம்பர் மாதம் வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் மிக்ஜாம் புயலாக தீவிரமாகி டிசம்பர் 3, 4 தேதிகளில் தலைநகர் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ் சிபுரம் ஆகிய மாவட்டங்களில் கடுமையான சேதாரத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து 17, 18 தேதிகளில் தென் தமிழகத்தில் பெய்த பெரு மழையால் தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது பாதிப்புகளை முழுமையாக மதிப்பிட்டு, தமிழ்நாடு இயற்கை பேரிடர் பாதிப்பில் இருந்து மீண்டு, மறுவாழ்வு பெறுவதற்கு தர ரூபாய் 37 ஆயிரத்து 907 கோடி பேரிடர் நிவாரண நிதி வழங்க வேண்டும் என ஒன்றிய அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய உள்துறை அமைச்சரை சந்தித்து வலியுறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்

புயல், பெருமழை இயற்கை பேரிடர் தாக்குதலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டுக்கு உதவிக் கரம் நீட்ட வேண்டிய ஒன்றிய அரசு வழக்கமாக, இயல்பான காலத்திற்கு வழங்கப்படும் மாநில பேரிடர் நிவாரண நிதி. தவிர, தற்போது ஏற்பட்ட பாதிப்புகளை எதிர் கொள்ள நிதியுதவி செய்ய மறுத்து, தமிழ்நாட்டையும், மக்களையும் வஞ்சித்து வருவதையும், ஒன்றிய நிதியமைச்சர் உள்பட பாஜகவினர் மலிவான அரசியல் பரப்புரை செய்து வருவதையும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், தமிழ்நாட்டில் ஏற்பட்ட இயற்கை பேரிடரை, கடுமையான தேசியப் பேரிடராக அறிவித்து, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு கோரியுள்ள ரூ.37 ஆயிரத்து 907 கோடியை முழுமையாக விரைந்து வழங்க வலியுறுத்தி 08.01.2024 திங்கள் கிழமை தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என மாநில நிர்வாகக் குழு முடிவு செய்கிறது.

**2. பாஜகவின் அதிகார அத்துமீறலுக்கு கண்டனம்**

சேலம் மாவட்டம், இராமநாயக்கன் பாளையம் ஏழை விவசாயிகள் கண்ணையன், கிருஷ்ணன் ஆகியாரின் நிலத்தை பறிக்க சட்டவிரோத மோசடியில் ஈடுபட்டு வரும் பாஜக இளைஞர் அணி செயலாளருக்கு ஆதரவாக அமலாக்கதுறை ஏவப்பட்டிருக்கிறது. அமலாக்கத்துறை ஏழை விவசாயிகளுக்கு அனுப்பிய அழைப்பாணையில் (சம்மன்) சாதிப் பெயரை குறிப்பிட்டு தீண்டாமை குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளது. அரசியலமைப்பு அதிகாரம் பெற்ற விசாரணை அமைப்பு இறையாண்மை இழந்து செயல்படுவதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில நிர்வாகக் குழு கண்டிக்கிறது.

**3. ஆதார் அட்டை இணைப்பை கட்டாயம் என்கிற உத்தரவை ரத்து செய்க**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத் தொழிலாளர்கள் அவர்களது வேலை அட்டையுடன் ஆதார் அடையாள அட்டையை இணைக்க வேண்டும் என நிர்பந்திக்கிறது கடந்த 31.12. 2023 ஆம் தேதியுடன் கால அவகாசம் முடிந்து விட்டது எனக் கூறி லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கும் பேராபத்தை உருவாக்கியுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் அமர்வு தனிநபர் அந்தரங்கம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றநிலை அரசின் திட்டங்களுக்கு ஆதார் அட்டை கட்டாயம் இல்லை என்று தீர்ப்பளித்துள்ளது. நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராகவும், விவசாயத் தொழிலாளர் நலனுக்கு விரோதமாகவும் செயல்படும் ஒன்றிய அரசை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலக் குழு கண்டிப்பதுடன் , நூறு நாள் வேலை அட்டையில் ஆதார் அடையாள அட்டை கட்டாயம் இணைக்க வேண்டும் என்ற உத்தரவை திரும்பப் பெறுமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**4. குற்றவியல் சட்டத் திருத்தம் – நீக்க கோருதல்**

ஒன்றிய அரசு குற்றவியல் சட்டத்தை திருத்தி, சாலை விபத்தில் சிக்கும் வாகன ஓட்டிகளுக்கு பத்தாண்டு சிறை தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது வாகன ஓட்டுநர்கள் மத்தியில் கடுமையான கொத்தளிப்பையும், எதிர்ப்பையும் உருவாக்கி இருப்பதை கருத்தில் கொண்டு, பத்தாண்டு தண்டனை என்ற சட்ட திருத்தத்தை நீக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில நிர்வாகக் குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.

பொங்கல் போனஸ் ரூ.5000 வழங்க கோரி

# கட்டட சங்கம் தபால் அனுப்பும் போராட்டம்



தமிழகத்தில் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள கட்டுமான தொழிலாளர்களுக்கு ரூ.5 ஆயிரம் போனஸ் வழங்க கோரி, தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி. கட்டிட தொழிலாளர் சங்கம் சார்பில், திருச்சி தலைமை தபால் நிலையத்தில் அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் முருகன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் செல்வகுமார், முன்னிலை வகித்தார். மாநிலத் துணைத் தலைவர்க. சுரேஷ் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

2024 பிப்ரவரி 3.4 மதுரையில்

# ஆட்டோ தொழிலாளர் சம்மேளன மாநில மாநாடு

தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர் சம்மேளன மாநில பொதுக்குழு கூட்டம் திருச்சி கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மதுரை மாவட்ட சங்கத் தலைவர் சித்திக் தலைமை தாங்கினார். இரங்கல் தீர்மானத்தை செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் ஜெகதீசன் முன்மொழிந்தார். திருச்சி மாவட்ட ஆட்டோ சங்க செயலாளர் சுப்பிரமணி வரவேற்புரை ஆற்றினார். ஆட்டோ சம்மேளன மாநில பொதுச் செயலாளர் ப. மாரியப்பன் வேலை அறிக்கையை முன் வைத்தார். தமிழ்நாடு ஏ ஐ டி யு சி யின் மாநிலத் தலைவர் எஸ் காசி விஸ்வநாதன் பங்கேற்று வழி காட்டினார்.

ஆட்டோ சம்மேளன மாநில மாநாட்டை 2024 பிப்ரவரி 3,4 ஆகிய தேதிகளில் மதுரையில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

# ஊராட்சி செயலாளர்களுக்கு உரிய சலுகைகளை வழங்க வேண்டும்

**பிப்.16ல் ஆர்பாட்டம் நடத்த முடிவு!**

தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு கிராம ஊராட்சி செயலாளர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் தஞ்சாவூரில் சங்க மாநிலத் தலைவர் கே.வாசுதேவன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் வை.தர்மராஜா அறிக்கை சமர்ப்பித்தார். மாநில பொருளாளர் ப.செந்தில் குமார் நிதி அறிக்கை தாக்கல் செய்தார். கூட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்தின் மாநில தலைவர் ப.குமார், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பணியாளர் சங்க மாநிலத் தலைவர் க.பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு அரசு பணியாளர் சங்க தஞ்சாவூர் மாவட்ட செயலாளர் த.பாஸ்கரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். ஊராட்சி செயலாளர்கள் 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வருவதுடன், தற்போது பதிவறை எழுத்தர்களுக்கு வழங்கப்படும் காலமுறை ஊதியம் பெற்ற வருகின்றனர். இவர்களுக்கு ஊரக வளர்ச்சித் துறையில் அதாவது மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், ஊரக வளர்ச்சி இயக்குனர் அலுவலகங்களில் பணிபுரிகின்ற பதிவறை எழுத்தர்களுக்கு வழங்கப்படும் அனைத்து அரசு சலுகைகளையும் ஊராட்சி செயலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதை வலியுறுத்தி வருகிற பிப்ரவரி 16ஆம் தேதி சென்னையில் மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## வினாடி - வினா விடைகள்

1. ஐ.நா. சபை (193 நாடுகள் உறுப்பினர்); இன்டர்போல் (190 நாடுகள் உறுப்பினர்)
2. அமெரிக்கா
3. 1948 அக்டோபர் 4
4. 1943 செப்டம்பர் 8
5. 1949 ஆம் ஆண்டு (தோழர் நல்லகண்ணு உட்பட 97 பேர் மீது வழக்கு)
6. முதலாம் இராஜராஜ சோழன்

பணி பாதுகாப்பு கோரி

# தமிழ்நாடு டெங்கு கொசுப் புழு ஒழிப்பு முன்களப் பணியாளர் சங்கம் உண்ணாவிரதம்




கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு வழங்கிட வேண்டும். பணிநீக்கம் செய்திடக் கூடாது. தினக் கூலி முறையை ரத்து செய்ய வேண்டும். மாத ஊதியம் வழங்கிட வேண்டும். குறைந்த பட்சம் ஊதியமாக மாதம் தோறும் ரூபாய் 21,000 வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை எழும்பூரில் கவன ஈர்ப்பு உண்ணாநிலை அறப்போராட்டம் தமிழ்நாடு டெங்கு கொசுப் புழு ஒழிப்பு முன்களப் பணியாளர் சங்கத்தின் தலைவர் கே.ஜெயவேலு தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் போராட்டத்தை துவக்கிவைத்து உரையாற்றினார்.

தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினார்.

தமிழ்நாடு டெங்கு கொசுப் புழு ஒழிப்பு முன்களப் பணியாளர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் ஏ.சதீஷ், மாநிலப் பொருளாளர் பூமிநாதன் ,சத்தியா, சுதா , மணிகண்டன், குணசேகரன் உள்ளிட்ட சங்கத்தின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர்.

தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் பி.காளிதாசன், பாராமெடிக் கல்வி மற்றும் நலச்சங்கத்தின் மாநில துணைத் தலைவர் எஸ்.தனவந்தன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் நிறைவு உரையாற்றினார்.

நெல்லை, தூத்துக்குடியில்

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெள்ள நிவாரணம்



**நெல்லை:** நெல்லையில் கனமழையால் தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளான சிந்து பூந்துறை, கைலாசபுரம், மீனாட்சிபுரம், நெல்லை டவுன் மக்களுக்கு நெல்லை சந்திப்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் *BSNL, NFTE,* இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இணைந்து நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நிஷிழிலி பாலு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஆர். சடையப்பன், ஏஐடியூசி மாவட்ட துணைத் தலைவர் ஆர்.ரெங்கன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஏ.சேதுராமலிங்கம், நண்பா முத்துகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் பி.முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடி:** மாப்பிள்ளையூரணி ஊராட்சிக்குட்பட்ட ராஜபாளையம், தாளமுத்துநகர், மாப்பிள்ளையூரணி நிவாரண முகாமில் தங்கியுள்ள கே.வி.கே.நகர் மக்கள் துப்பாஸ்பட்டி பொட்டல்காடு முத்தையாபுரம் ஆகிய பகுதிகளுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது. ஜனசக்தி 2024 ஆம் ஆண்டுக்கான காலண்டரும் வழங்கப்பட்டது.

தொலைதொடர்பு துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்களான வேலூர் கே.அல்லிராஜா, முத்துகுமரன் பாளையங்கோட்டூர். எஸ்.பாலசுப்பிரமணியன் பாளையங்கோட்டூர். ஸ்ரீ.மகாலெட்சுமி அரிசி ஆலை உரிமையாளர். சி.பெருமாள். கம்யூனிஸ்ட் கட்சி வழக்கறிஞர். பெ. கணபதி சுப்பிரமணியன் குடும்பத்தினர் நெல்லை TNSTC-AITUC சங்க தலைவர் ஜெயகுமார், பொதுசெயலாளர் உலகநாதன் ஆகியோர் வழங்கிய நிதியிலிருந்து அரிசி, பருப்பு, உப்பு, எண்ணெய் உட்பட்ட பலசரக்கு சாமான்களோடு 2024 ஆம் ஆண்டுக்கான ஜனசக்தி காலண்டரும் வாங்கப்பட்டது.

# மருத்துவ மாணவர்களின் பணி நேரத்தை 8 மணி நேரமாக வரையறுக்க வேண்டும்

**சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கோரிக்கை**

பயிற்சி மருத்துவர்கள் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் பணி நேரத்தை 8 மணி நேரம் மட்டுமே என்பதை ,தமிழ்நாடு அரசு உறுதி செய்ய வேண்டும் என்று சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை. இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

தொடர்ச்சியான பல மணி நேர வேலை பளுவின் காரணமாக, தஞ்சை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த 26 வயது முதுநிலை மருத்துவ மாணவர் டாக்டர் தமிழ் அழகன் மரணமடைந்துள்ளார்.

இறப்பதற்கு முன்பு தொடர்ச்சியாக 48 மணிநேரம் பணி செய்ததாக கூறப்படுகிறது . இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.தொழிலாளர் விரோதப் போக்காகும்.

கடந்த வாரம் தான் சென்னை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த 30 வயதே ஆன, டாக்டர். மருது பாண்டியன் என்ற முதுநிலை மருத்துவ மாணவர் கடும் வேலை பளுவால் உயிரிழந்தார்.

அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு வருவதற்குள், தற்பொழுது, டாக்டர் தமிழ் அழகன் மரணமடைந்துள்ளார். தமிழ்நாடு அரசு, உடனடியாக இக்கொடுமைக்கு முடிவு கட்ட வேண்டும்.

பணியின் போது இறந்த, டாக்டர் தமிழ் அழகன் குடும்பத்திற்கும், டாக்டர் மருது பாண்டியன் குடும்பத்திற்கும் தலா ரூபாய் 50 லட்சம் இழப்பீடு வழங்கிட வேண்டும்.

மருத்துவப் பணியை விரும்பி நேசிக்கும் வகையில், மகிழ்வோடு பணி செய்யும் வகையில் பணி இடங்களில், சிறந்த பணிச் சூழலை உருவாக்கிட வேண்டும்.

DPH,DMS,DME என்ற மூன்று துறைகள் உள்ளிட்ட அனைத்து அரசு மருத்துவத் துறைகளில் பணிபுரியும் அனைத்து அரசு மருத்துவர்கள், மருத்துவ மாணவர்களின் வேலை நேரம் அதிக பட்சமாக ஒரு நாளைக்கு 8 மணி நேரம் என்றும் ,ஒரு வாரத்துக்கு 48 மணி நேரம் என்றும் மட்டுமே இருக்க வேண்டும்.

பயிற்சி மருத்துவர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள் மற்றும் மருத்துவர்களின் குறைகளை தீர்க்கும் வகையில், அவர்களுக்கென்று"மருத்துவர்கள் மருத்துவ மாணவர்கள் நல வாரியத்தை " தமிழ்நாடு அரசு உடனடியாக உருவாக்கிட வேண்டுமென, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு அரசை கனிவோடு கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சிற்றூராட்சிகளை பேரூராட்சிகளாக மாற்றக் கூடாது!

## சி.பி.ஐ ஈரோடு வடக்கு மாவட்ட குழு எதிர்ப்பு!

இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்டக் குழுக் கூட்டம், கட்சி அலுவலகத்தில், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பவானி கே.கே.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக்கட்சியின் செயலாளர் எஸ்.மோகன்குமார், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் டி.ஏ.மாதேஸ்வரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜி.வெங்கடாசலம், கே.சக்திவேல், மாவட்ட கட்சியின் பொருளாளர் பி.என்.இராஜேந்திரன், பழங்குடி மக்கள் சங்க தலைவர் வி.பி.குணசேகரன் மற்றும் ஒன்றிய நகர செயலாளர்கள், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த, சென்னம்பட்டி, குருவரெட்டியூர், கேசரிமங்கலம், பட்லூர், வெள்ளித்திருப்பூர், அந்தியூர்ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிரம்மதேசம், பர்கூர், சின்னத்தம்பிபாளையம், மைக்கேல் பாளையம், பச்சாம்பாளையம், வேம்பத்தி, பவானி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மயிலம்பாடி, ஓடத்துறை, பெரியபுலியூர், பருவாச்சி, தொட்டிபாளையம், கவுந்தப்பாடி, கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கலிங்கியம், டி.என்.பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச்சார்ந்த கொங்கர்பாளையம், பெருமுகை, நம்பியூர்ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கெட்டிச்செவியூர், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிக்கரசம்பாளையம், குத்தியாலத்தூர், கொமராபாளையம், சதுமுகை, உக்கரம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொத்தமங்கலம், நல்லூர், தொப்பம்பாளையம், உத்தண்டியூர், தாளவாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பயனபுரம், தாளவாடி, தகனாரை ஆகிய ஊராட்சிகளை பேரூராட்சிகளாக மாற்றிட, பேரூராட்சிகள் இயக்குநரகம், ஊராட்சிகளின் மக்கள் தொகை, ஆண்டு வருமானம் போன்ற விபரங்களை ஊராட்சி ஒன்றிய அலுவலங்களில் கேட்டு வருகிறது.

குறிப்பாக 10,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள ஊராட்சிகள், குறிப்பிட்ட வருமானத்திற்கு மேல் உள்ள ஊராட்சிகள் ஆகியவற்றை பேரூராட்சிகளாக மாற்றும் நோக்கில் இந்த விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட ஊராட்சிகளை எக்காரணம் கொண்டும் பேரூராட்சிகளாக மாற்றக் கூடாது என தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

# கள்ளக்குறிச்சிபெருமங்கலம் ஊராட்சி செயலாளரை பணிநீக்கம் செய்ய கோரி வி.தொ.ச. ஆர்ப்பாட்டம்



கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெருமங்கலம் ஊராட்சியில் 75 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதி நத்தம் சார்ந்தது. ஒருவர் தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக கிராம நத்தம் நிலத்தில் வீடு கட்டி வாழ்கிறர் என்பதற்கு உரிய ஆவணங்களுடன் (வீட்டு வரி, குடிநீர் கட்டணம் – மின்சாரக் கட்டணம்) வருவாய்த் துறைக்கு விண்ணப்பித்து வீட்டு மனைக்கு கிராம நத்தம் பட்டா பெறலாம். பெருமங்கலம் ஊராட்சி செயலாளர் முத்துக்குமார் என்பவர்.

ஏழை எளிய, பொருளாதாரத்தில் நலிவுற்ற, மக்களுக்கு உரிய வரி ரசீதுகளை வழங்காமல், வசதிபடைத்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு மட்டும் வரி இரசீது வழங்கி பட்டா பெற காரணமாக இருந்துள்ளார். அவரை பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இப்போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பெருமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் ஆகியோரின் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தி, தவறாக ஆக்கிரமிப்பு செய்தவர்களின் பட்டாவை ரத்து செய்திட உத்தரவிட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது,

இன்னும் ஓரிரு தினங்களில் அவசர கூட்டம் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு ஆன்லைனில் திருத்தம் செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதன் பேரில் ஆர்ப்பாட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இதில் மாவட்டத் தலைவர் முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் ரீத்தா, மாவட்டத் துணைத் தலைவர் கே. கபில்தேவ், மாதர் சங்க மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி மற்றும் பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# விகிதாச்சார அடிப்படையிலான தேர்தல் முறையை அமல்படுத்த வேண்டும்

## ஏ.ஐ.ஒய்.எப். நகர மாநாடு வலியுறுத்தல்



அனைத்திந்திய இளைஞர் மன்றத்தின் திருத்துறைப்பூண்டி நகர 13வது மாநாடு திருத்துறைப்பூண்டியில் நகரத் தலைவர் ஷேக்தாவூத் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டினை தொடங்கி வைத்து இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி பேசினார்கள்.

புதிய நிர்வாகிகளை வாழ்த்தி இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் துரை அருள்ராஜன், மாவட்டத் தலைவர். சு.பாலசுப்பிரமணியன் பேசினர். திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கே.உலகநாதன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.வி.சந்தரராமன், கு.ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகரச் செயலாளர் டி. பி. சுந்தர், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் ஜெ.பி. வீரபாண்டியன் ஆகியோர் மாநாட்டினை வாழ்த்தி பேசினார்கள்.

நகர செயலாளர் வி.சி கார்த்திக் அறிக்கையினை முன்மொழிந்தார். ஒன்றிய தலைவர் கே.பார்த்தீபன், ஒன்றிய செயலாளர் கே. சி. ஸ்ரீதரன், இளம் பெண்கள் அமைப்பின் பொறுப்பாளர் ஆர். சுபிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் தலைவராக ஆர்.ராகேஷ்சர்மா, செயலாளராக பி.வி.சி.கார்த்திக், பொருளாளராக ஜி.பாரதமணி, துணைதலைவர்கள் சி.தானியசெல்வன், எஸ்.ஐயப்பன் துணைத் செயலாளர் எஸ். வி. ஹரிஹரன், எஸ்.வரதரா ஆகியோர் செய்யப்பட்டனர்.

மாநாட்டில், விகிதாச்சார அடிப்படையிலான தேர்தல் முறையை இந்தியாவில் நடைமுறை படுத்தவேண்டும், வீட்டுக்கு ஒருவருக்கு கட்டாயம் அரசு வேலை வழங்க வேண்டும், தேசிய வங்கிகளில் மாணவர்கள் பெற்ற கல்விக்கடன் அனைத்தையும் நிபந்தனையின்றி தள்ளுபடி செய்திட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## இயற்கை வேளாண் விஞ்ஞானி

# நம்மாழ்வார் நினைவுநாள்!

இயற்கை வேளாண் விஞ்ஞானி டாக்டர் கோ. நம்மாழ்வார் 10ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி தஞ்சாவூர் இரயிலடி முன்பு, இடதுசாரிகள் பொது சார்பில் நடைபெற்றது. நிகழ்விற்கு தாளாண்மை உழவர் இயக்க தலைவர் பொறியாளர் கோ. திருநாவுக்கரசு தலைமை வகித்தார். இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் முன்னிலை வகித்தார். உலகத் தமிழர் பேரமைப்பின் துணைத்தலைவர் அயனாவரம் சி. முருகேசன், மக்கள் அதிகாரம் மாநில பொருளாளர் காளியப்பன், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர். ராமச்சந்திரன், ஏஐடியுசி ஓய்வு பெற்றோர் சங்கத்தின் துணைச் செயலாளர் பி.சக்திவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நம்மாழ்வார் நினைவேந்தல் நிகழ்வில் விவசாயிகளுக்கு எதிரான நில ஒருங்கிணைப்பு சட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

# கட்சி கொடியேற்றுவிழா

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொடியேற்று விழா–தெருமுனைக் கூட்டம். கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட சித்தலவாய், முனையனுர், லட்சுமணம்பட்டியில் கொடியேற்று விழா – தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன், முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம், மாவட்ட துணை செயலாளர்கள் கே.சண்முகம், எஸ்.மோகன் குமார், மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.லட்சுமி காந்தன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## இ.எஸ்.ஐ., பி.எப்.க்கான

# ஊதிய உச்ச வரம்பை ரத்து செய்ய வலியுறுத்தி ஏஐடியுசி ஆர்ப்பாட்டம்




இ.எஸ்.ஐ., பி.எப். க்கான ஊதிய உச்ச வரம்பை ரத்து செய்ய வலியுறுத்தி கோவை மாவட்ட பொறியியல் பொது தொழிலாளர் சங்க ஏ.ஐ.டி.ய.சி.யின் சார்பில் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள மத்திய தந்தி அலுவகம் அருகில் சங்கத்தின் தலைவர் எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.எம்.செல்வராஜ், கௌரவத் தலைவர் வழக்கறிஞர் கே.சுப்பிரமணியன், துணைப் பொதுச் செயலாளர்கள் சி.தங்கவேல், என்.ரமேஷ்குமார், பொருளாளர் ஏ.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கட்டிட சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு

மதுரையில் ஏஐடியூசி கட்டட தொழுலாளர் சங்கம் பகுதி குழு கூட்டம் எம்.பாலமுருகன் தலைமையில் ஜெய்ஹிந்த்புரத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சங்கத்தின் மதுரை மாவட்ட செயலாளர் எம். இருளாண்டி கலந்து கொண்டார்.

இந்த பகுதி குழுவின் நிர்வாகிகளாக தலைவர் எஸ்.சேகர், செயலாளர் எம்.பாலமுருகன், பொருளாளர் பி.குருசாமி, நிர்வாக குழு உறுப்பினர்களாக ஜி.பாலன், ஏ.பாஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# இந்த வார தம்பிக்குறள்

### 146. இயற்கைக் கறிவுண்டு

**இயற்கைக் கறிவிலை என்ப அறியார்**
**இயற்கை அறிவே அறிவு.**

இயற்கைப் பொருள்களுக்கு அறிவில்லை என்று எண்ணுபவரே அறிவில்லாதவர், இயற்கை நமக்குக் கற்றுக் கொடுக்கும் அறிவே பேரறிவாகும்.

**இயற்கை அறிவே செயற்கை அறிவுக்கு**
**வித்தென்று வீணரறி யார்.**

நாம், பெறுகின்ற அறிவியல் முதலிய செயற்கை அறிவுக்கு அடிப்படை விதையாக இருப்பது இயற்கை அறிவே ஆகும். இதனைப் பேதைகள் அறியமாட்டார்கள்.

# கலை இலக்கியப் பூங்கா




## ‘மணிமேகலை மன்றம்’ 66 வது ஆண்டு விழா

மணிமேகலை மன்றத்தின் 66வது ஆண்டு விழா 30.12.2023 அன்று ராஜபாளையம், காந்தி கலைமன்றத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற பொதுச்செயலாளர் மரு.த.அறம், கவிஞர் கிருஷ்ணபிரசாத், தமுஎகச தோழர் லட்சுமிகாந்தன் வாழ்த்துரை வழங்கினர்.

ராஜபாளையத்தைச் சேர்ந்த டாக்டர் கணேசன் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் விருது பெற்றுள்ளதை கௌரவிக்கும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவருக்கு நினைவு பரிசு வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வை மணிமேகலை மன்றம் குறிஞ்சிச் செல்வர் கொ.மா.கோதண்டம், ராஜேஸ்வரி கோதண்டம், கொ.மா.கோ. இளங்கோ, பீமராஜா, ரஜினி பெத்தராஜா, நந்தன் கனகராஜ், ஆகியோர் முன்னின்று நடத்தினர். கவிஞர் ஆனந்தி நிகழ்வை தொகுத்து வழங்கினார்.



## “புத்தாண்டை புத்தகத்தோடு” வரவேற்கும் நிகழ்வு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் குமரி மற்றும் நியூ செஞ் சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையில் “புத்தாண்டை புத்தகத்தோடு” வரவேற்கும் நிகழ்வு 31.12.2023 ல் நடைபெற்றது. ஆர்.எல்.விக்டர் அவர்கள் பாடிய பாரதிதாசன் பாடலோடு துவங்கியது. எழுத்தாளர் மீரான் மைதீன் அவர்கள் “படைப்பின் மனம்” எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். கலை இலக்கிய பெருமன்ற தோழர்கள் தங்களின் வாசிப்பு அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். நாகர்கோவில் நியூ செஞ்சுரி வாசகர் வட்ட தலைவர் ஊடகவியலாளர் ஜவஹர்.ஜி அவர்கள் நிகழ்வில் வரவேற்பும் தொகுத்தும் வழங்கினார்.

## நூல்கள் வெளியீட்டு விழா

கவிஞர் மு.ஆதிராமன் எழுதிய “காத்தவராயன் நம்ம ஊரு சாமியின் காதல் கதை”, “மூத்த வாரிசு கடோற்கசன்” ஆகிய இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா 29.12.2023 அன்று புதுவைப் தமிழ் சங்கத்தில் எல்லை.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் க.லட்சுமி நாராயணன் நூலினை வெளியிட, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் அ.மு.சலீம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற தலைவர்களில் ஒருவரான முனைவர் இரா. காமராசு, மாநில செயற்குழு உறுப்பினர் மு.சி.இராதாகிருஷ்ணன், தமிழ் சங்க செயலாளர் சீனு. மோகன் தாஸ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

“காத்தவராயன்” நூல்குறித்துபேராசிரியர் செல்லப் பெருமாள், கடோற்கஜன் நூல் குறித்து பேராசிரியர் ஆழி வெங்கடேசன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

முன்னாள் அமைச்சர் ஆர்.விசுவநாதன் வாழ்த்துரை வழங்கினார். வ. சுப்பையா, துரை செல்வம் ப.விவேகானந்த தாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக தங்கமணி வரவேற்க பொதுச்செயலாளர் பெ.பாலகங்காதரன் நன்றி கூறினார்.

## நூல் அறிமுக விழா

திண்டுக்கல் மாநகர் கிளை மற்றும் நாகல் நகர் கிளை நூலகம் இணைந்து நாகல் நகர் கிளை நூலகத்தில் இரண்டு நூல்கள் அறிமுக நிகழ்வு நடைபெற்றது. தமிழாசிரியர் பெ.கோவிந்தராஜ் தலைமையேற்றார். கவிஞர் பாஸ்டீன் மதுரம், மாவட்டத் துணைத் தலைவர், தகஇபெ அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

கவிஞர் சொக்கமேளா, மாவட்ட மையக்குழு, தகஇபெ, படைப்பாளர்களுக்கு நினைவு பரிசு வழங்கி, வாழ்த்துரை வழங்கினார். கவிஞர் திண்டுக்கல் திலகவதியின் “சுனையாய் உருப்பெரும் நிலம்” கவிதை நூல் குறித்து கவிஞர் ராம்போ குமார் அறிமுகம் செய்தார். கவிஞர் தி.காவிரி நாடனின் “ரியா வரைந்த வானம்” கவிதை நூல் குறித்து பேரா.முனைவர் மீனா சுந்தர், அறிமுகம் செய்தார். நூலாசிரியர்கள் இருவரும் ஏற்புரை வழங்கினர். இறுதியில் நாகல் நகர் கிளை நூலகத்தின் நூலகர் வெ.பாபு நன்றி கூறினார்.

## எழுத்தாளர் பிரபஞ்சன் நினைவஞ்சலி நிகழ்ச்சி

எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி, புதுச்சேரி மாநிலக் கலை இலக்கியப் பெருமனறம் சார்பில் சித்தன்குடி இந்திரஜித் குப்தா பதிப்பகத்தில், கலை இலக்கியப் பெருமன்ற தலைவர் எல்லை.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது. கலை இலக்கியப் பெருமன்ற பொருளாளர் துரைசெல்வம் முன்னிலை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் ஆர்.விசுவநாதன், பேராசிரியர் க. பஞ் சாங்கம், பேராசிரியர் நா. இளங்கோ, ஆசிரியர் அமரநாதன், தமிழ் சங்க செயலாளர் சீனு மோகன் தாஸ், முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்க துணை செயலாளர் பச்சையம்மாள் ஆகியோர் உரையாற்றினார்கள். இந்த நிகழ்ச்சியில் கலை இலக்கியப் பெருமன்ற நிர்வாகிகள் மு.சி. இராதாகிருஷ்ணன், இரா.தங்கமணி, சந்திரகுமார், பேராசிரியர்கள் விவேகானந்த தாசன், அன்பு செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் பொதுச்செயலாளர் பெ.பால கங்காதரன் நன்றி கூறினார்.

## திருப்பூரில் பாரதிவிழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் திருப்பூர் வடக்கு மாநகர் மகாகவி பாரதியின் பிறந்ததின சிறப்புக் கூட்டம் திருப்பூர் பி.கே. ஆர் இல்லத்தில் திருப்பூர் மாநகர் மாவட்டத் தலைவர் பி.ஆர்.நடராசன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் வடக்கு மாநகர் செயலாளர் எஸ்.ஏ.காதர், மாநில துணைச்செயலாளர் த.சசிகலா, ஈரோடு மாவட்ட க.இ.பெ.ம செயலாளர் ஓடை.துரையரசன், கட்சி கல்விக்குழு ஆசிரியர் பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கு தோழர்கள் ஏ.வி.பழனிச்சாமி, எஸ்.சண்முகம், இரா.தமிழ்ச்செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஈரோட்டில் இருந்து துரையரசனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் அரசியல், பண்பாட்டு காலாண்டு இதழான “இடது” இதழை அறிமுகப்படுத்தி, அதில் வெளிவரும் பாலச்சந்திரனின் மொழியாக்க அரசியல் கட்டுரைகள், கவிதைகளை விளக்கி ஆசிரியர் அ.பழனி, நூலை சிறப்பான முறையில் அறிமுகம் செய்து வைத்துப் பேசினார்.

திருப்பூர் மாநகராட்சியின் துணை மேயர் எம்.கே.எம். ஆர்.பாலசுப்பிரமணியம் பாரதியின் சிறப்புக் குறித்துப்பேசினார்.

கட்சியின் ஈரோடு மாவட்ட துணைச் செயலாளர், ஜி. வெங்கடாசலம், ஆசிரியர் சி.இராமகிருஷ்ணன், ஆசிரியர் க.இராமசுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்.

பாரதி குறித்த பாடல்களை எஸ். பழனிச்சாமி, ஆசிரியர் பெ.இராமன், கவிஞர் ஆலம்பாவா ஆகியோர் பாடிச் சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியை நரேஷ் எஸ்.சீனிவாசன் தொகுத்து வழங்கினார். ஆசிரியர் என்.அய்யாவு நன்றி கூறி நிறைவு செய்தார்.

நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள் வெகுவாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மதுரையில் திரைப்படவிழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மதுரை மாவட்டம், ‘மறுபக்கம்‘ ஆர்.அமுதன் உடன் இணைந்து 25ஆவது மதுரை திரைப்பட விழாவை நேதாஜி சாலையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் கொண்டாடியது.

கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் வரவேற்றார்.

“மறுபக்கம்” ஆர்.அமுதன் நிகழ்வைத் துவக்கி வைத்தார். மாவட்டத் தலைவர் கவிஞர் மு.செல்லா விமர்சன உரையாற்றினார்.

எழுத்தாளர் சுப்ரபாரதி மணியன், கவிஞர்கள் பேனா.மனோகரன், ஜி.மஞ்சுளா, தமிழ் சிவா, அழகுபாரதி, திண்டுக்கல்லில் இருந்து கவிஞர் யவனிகா ஸ்ரீராம், மாநில துணைச் செயலாளர் வே.பிரபாகரன், செயற்குழு உறுப்பினர்கள் பேராசிரியர் சத்தியபாலன், கவிஞர் கலியமூர்த்தி, எழுத்தாளர் சசிகலா, மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.ஏ.காதர், திருப்பூர் குணா மற்றும் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ‘தி சவுண்ட்’, ‘தி பேர்ட்’, ‘தி பிரிஸ்ட் அண்டு தி சிக்டீன் மில்லட் தீவ்ஸ்’ ஆகிய உளவியல் மற்றும் சூழலியல் ஆவணப் படங்கள் திரையிடப்பட்டு விவாதிக்கப்பட்டன.

---

16 ஆம் பக்கத் தொடர்ச்சி

முறை ஊதியமும், வாரிசு வேலை மற்றும் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

- தூய்மை காவலர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி மாத ஊதியம் ரூ.11,848 க்கு குறையாமல் கால முறை ஊதியமும், இ.எஸ்.ஐ, பி.எஃப் வழங்க வேண்டும்.
- பள்ளி சுகாதார தூய்மைப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி மாத ஊதியம் ரூ.11,848க்கு குறையாமல் கால முறை ஊதியமும், இ.எஸ்.ஐ, பி.எஃப் வழங்க வேண்டும்.
- தூய்மை பாரத இயக்க ஊக்குவிப்பாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி மாத ஊதியம் ரூ.11,848க்கு குறையாமல் கால முறை ஊதியமும் இ.எஸ்.ஐ, பி.எஃப் வழங்க வேண்டும்.
- தூய்மைபாரதஇயக்கம்(ஊரகம்)மாவட்ட, வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கு காலமுறை ஊதியம், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறையில் ஏற்படும் நிரந்தர காலி பணியிடத்தில் 10 ஆண்டு பணிபுரிந்த அனைவருக்கும் ஏற்கனவே இத்துறையில் பல பிரிவு ஊழியர்களுக்கு வழங்கியது போல் இவர்களுக்கும் கால முறை ஊதியம் வழங்க வேண்டும்.
- அனைத்து திட்ட கணினி இயக்குபவர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் என்ற தீர்ப்புகளின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும்.
- சமூக தணிக்கையாளர்களுக்கு மீண்டும் பணி பாதுகாப்புடன் கூடிய பணி வழங்கிட வேண்டும்.
- மகளிர் திட்ட ஊழியர்கள் அனைவருக்கும் சம வேலைக்கு சம ஊதியம் என்ற தீர்ப்புகளின் அடிப்படையில் அவரவர்களின் நிரந்தர அரசு பணிக்கு நிகரான ஊதியம் வழங்க வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை மாநாடு முன்வைத்துள்ளது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவராக இருந்து வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி விழா பேருரை ஆற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில செயற்குழு உறுப்பினரும் ஏஐடியுசி தேசிய செயலாளருமான டி.எம். மூர்த்தி, பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, திமுக மாவட்ட துணைச்செயலாளர் நாகராஜன் ஆகியோர் கோரிக்கைகளை ஆதரித்தும், வலியுறுத்தியும் பேசினர். முன்னதாக கோரிக்கைகளை விளக்கி சங்கத்தின் பொதுச்செயலாளர் பெ.கிருஷ்ணசாமி பேசினார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி, ஏஐடியுசி மாவட்ட நிர்வாகிகள், சங்க நிர்வாகிகள் உள்பட 40 ஆயிரம் தொழிலாளர்கள்கள் பங்கேற்றனர். சங்க நிர்வாகிகள் தீர்மானங்களை முன்மொழிந்தனர். சங்க பொருளாளர் ஜி.ராஜேந்திரன் நன்றி கூறினார்.

சங்கத்தின் கோரிக்கையை ஏற்று தூய்மை காவலர்களுக்கு ரூ.1,400 ஊதிய உயர்வு, ஒருங்கிணைப்பாளர்களுக்கு சிறந்த ஊதிய உயர்வு, ஊதியம் இல்லாமல் பணிபுரிந்த ஊக்குவிப்பாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவித்தார். மேலும், கோரிக்கைகள் அனைத்தும் ஏற்கத்தக்கவை, நியாமானவை இவற்றை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகளை எடுப்பேன் என்றும் அவர் உறுதி அளித்தார்.

ஆளும் திமுக சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், “க.மாரிமுத்து எம்.எல்.ஏவும் தானும் முதலமைச்சரை சந்தித்துப் பேசுவதுடன், சட்டமன்றத்திலும் பேசுவோம்” என்றார். மாரிமுத்து எம்.எல்.ஏ.வும் அதனையே குறிப்பிட்டார். கோரிக்கைகளை தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டே இருக்க போராட வேண்டும் என்று டாக்டர் கலைஞர் கூறியதை டி.எம். மூர்த்தி மேற்கோள்காட்டி விவரித்தார். ஒற்றுமையுடன் போராடினால்தான் கோரிக்கைகள் நிறைவேறும் என்பதை ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு அந்த மாநாடு உணர்த்தியது.

**– ம.ராதாகிருஷ்ணன், கே.கிருஷ்ணசாமி**

### கோரமண்டல் ஆலை அமோனியா வாயு கசிவு

# தொடர் போராட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு




டிசம்பர் 26 ஆம் தேதி நள்ளிரவில் எண்ணூர் பெரிய குப்பத்தில் உள்ள கோரமண்டல் ஆலைக்கு துறைமுகத்திலிருந்து குழாய் மூலம் திரவ அமோனியா செல்லும் போது ஏற்பட்ட கசிவு காரணமாக பெரிய குப்பம், சின்ன பர்மா நகர், நேதாஜி நகர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு கண் எரிச்சல், சுவாச பிரச்சனை வாந்தி, மயக்கம் மூச்சு விட சிரமம் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டதால், அவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்தனர். இவர்களில் 50க்கும் மேற்பட்டோருக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு, சிலர் மேல் சிகிச்சைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தமிழக அரசும் அந்த ஆலையை தற்காலிகமாக மூட ஆணையிட்டுள்ளது.

இந்நிலையில், அமோனியா வாயு வெளியேறிய கோரமண்டல் ஆலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி அந்தப் பகுதி மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதில் ஏராளமான பெண்களும் பங்கேற்றுள்ளனர்.

ஏழாவது நாள் அன்று, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை சந்தித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஆதரவு தெரிவித்தார். அவருடன் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாமன்ற உறுப்பினர் மோ.ரேணுகா மற்றும் எம்.ஜெய்சங்கர் ஜா.இராஜசேகர், எம்.காவிரி செல்வம் உள்ளிட்ட தோழர்களும் சென்றிருந்தனர்.

போராட்டத் திடலில் பேசிய மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், “டிசம்பர் 25 அன்று சிபிசிஎல் நிறுவனத்தினால் ஏற்பட்ட எண்ணெய் கசிவு பாதிப்புக்கு அந்த நிறுவனமே முழு பொறுப்பேற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண வழங்க வலியுறுத்தி, அந்த நிறுவனத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினோம். டிசம்பர்27 அன்று இந்தியன் ஆயில் நிறுவனத்தின் அலட்சியத்தால் ஏற்பட்ட





டேங்கர் வெடிவிபத்து எதிராக கடந்த 30ஆம் தேதி போராட்டம் நடத்தினோம்.

கடந்த ஏழு நாட்களாக நடைபெற்று வரும் உங்களுடைய போராட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முழு ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது. பெண்கள் பங்கேற்கும் அனைத்து போராட்டங்களும் நிச்சயம் வெற்றி அடையும். கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் என்கிற இந்த நிறுவனம் தொடர்ச்சியாக இது போன்ற பாதிப்புகளை மக்களுக்கு ஏற்படுத்தி வருகிறது என்று கூறினீர்கள். தொழிற்சாலைக்கோ விஞ்ஞான முன்னேற்றத்திற்கோ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எதிரானது அல்ல. ஆனால் அந்த முன்னேற்றம் மக்களுடைய பாதுகாப்புக்கு முன்னுரிமை தர வேண்டும். அதற்கு மாறாக மக்களுக்கு ஆபத்தை விளைவிக்க கூடிய எந்த நிறுவனத்தையும் எத்தகைய பெரும் முதலாளிகளின் நிறுவனத்தையும் இந்தியக்

> இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த, 42 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரேணுகா, சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டத்தில் கோரமண்டல் ஆலை அமோனியா வாயு கசிவு, அதன் பாதிப்பு குறித்து எடுத்துரைப் பேசினார்.

கம்யூனிஸ்ட் கட்சி உறுதியுடன் எதிர்த்துப் போராடும்.

அமோனியா வாயு கசிந்தவுடன் இந்த ஆலையை தமிழக அரசு தற்காலிகமாக மூடி உள்ளது. இது குறித்து குழு அமைத்து விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது. தமிழக அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது. இருப்பினும் மக்களின் ஐயத்தை போக்கும் விதமாக நிரந்தர தீர்வையும் தமிழக அரசு உறுதி செய்து தர வேண்டும். கோரமண்டல் நிறுவனம் விபத்து ஏற்பட்டது குறித்தும் அதற்கான காரணங்களையும் மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்காமல், மௌனம் காப்பது சந்தேகத்தை வலுப்படுத்துவதாக உள்ளது. ஏற்கனவே எண்ணூர் எண்ணெய் கசிவு அதைத்தொடர்ந்து தற்போது அமோனியா கசிவு, இந்தியன் ஆயில் நிறுவனத்தில் வெடிவிபத்து என தொடர்ச்சியாக வடசென்னையில் உள்ள நிறுவனங்களின் செயல்பாடுகள் பெரும் தீங்கை ஏற்படுத்தும் போக்கையே கொண்டுள்ளன.

இங்கே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் பந்தல் அமைப்பதற்கோ மைக்செட் வைப்பதற்கோ அனுமதி இல்லை என்பது அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கிய பேச்சுரிமையை, போராடும் உரிமையை பறிக்கும் செயலாகும்.

இவ்வளவு பெண்கள் வெயிலில் அமர்ந்து போராடுகிறார்கள். எனவே பந்தல் மற்றும் மைக் செட் அமைப்பதற்குமான அனுமதியை உடனடியாக அதிகாரிகள் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உணர்வை வெளிப்படுத்த அகிம்சை போராட்டங்களை மேற்கொள்வதை யாராலும் தடுக்க முடியாது. ஆலைக்கு எதிராக போராடியவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை முழுமையாக திரும்பப்பெற வேண்டும். மக்கள் வைக்கும் கோரிக்கைகளை தீர ஆய்வு செய்து நிரந்தர முடிவு எடுக்க வேண்டும். மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாசற்ற வாரியமாக திகழ வேண்டும். உங்களுடைய போராட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்றும் உறுதுணையாக இருக்கும்” என்றும் இரா. முத்தரசன் உறுதியுடன் தெரிவித்தார்.

**- வெங்கடேஷ் வேம்புலி**

# போக்குவரத்து தொழிலாளர் போராட்ட நோக்கம் சிதையக்கூடாது!

## ஏஐடியுசி, எச்எம்எஸ், ஜஎன்டியுசி கூட்டறிக்கை

போக்குவரத்து தொழிலாளர்களின் நிறைவேற்றப்படாத நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 19.12.23 தேதியன்று ஏஐடியூசி, ஐஎன்டியுசி ,சிஐடியு, எச்எம்எஸ், எம்எல்எப், TTSF, DWU ஆகிய மத்திய அமைப்புகளோடு இணைக்கப்பட்ட போக்குவரத்து தொழிலாளர் சங்கங்கள் வேலை நிறுத்த முன்னறிவிப்பை தந்திருந்தன.

இதன்மீதுபேசிதீர்வுகாணுமாறு அரசுக்கு பல்வேறு வகைகளில் முறையீடுகள் வைக்கப்பட்டன. போக்குவரத்து அமைச்சர் அவர்கள் தொழிற்சங்கங்களை நேரில் அழைத்துப் பேசியும், முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தியும் கூட எந்த ஒரு தீர்வுக்கும் முன் வர அரசாங்கம் மறுப்பது மிகவும் கவலைக்குரியதாகும். எனவே வேறு வழியின்றி, முன்னறிவிப்பின்படி வேலைநிறுத்தம் செய்யும் சூழலுக்கு தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் வேலை நிறுத்தத்தை முன்னிட்டு, அண்ணா தொழிற்சங்க பேரவை சிஐடியு கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழ்நாடு முழுமையிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. கூட்டாக வேலை நிறுத்த முன்னறிவிப்பு தந்த சங்கங்களை சிஐடியு கூட்டமைப்பு என்று பெயரிட்டு அழைப்பது பொருளற்றதாகும். அவ்வாறு எந்த முடிவும் மேற்கொள்ளப்படவில்லை.

எவ்வித அரசியல் உள்நோக்கமும் இன்றி, தொழிலாளர்களின் நலனை மட்டுமே மையப்படுத்தி இந்த வேலை நிறுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து தொழிலாளர்களுக்கு பல்வேறு தீமைகளை அஇஅதிமுக அரசு இழைத்தபோது, அவற்றையெல்லாம் நியாயப்படுத்தி, அந்த அரசுக்கு துணை நின்ற அண்ணா தொழிற்சங்க பேரவை (ஏடிபி) தொழிற்சங்கம், இப்போது அரசியல் நோக்கத்தோடு இந்த வேலை நிறுத்தத்தை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது.

அதனுடன் சேர்ந்து இயங்குவது பற்றி சக தொழிற்சங்கங்களோடு எந்த கலந்துரையாடலும், முடிவும் இல்லாமல், ஏடிபியுடன் ஒரு கூட்டமைப்பை சிஐடியு உருவாக்கி இருப்பது சரியல்ல. இதனை கீழே கையொப்பம் இட்டுள்ள சங்கங்கள் ஏற்கவில்லை. தன்னிச்சையாக, தான் எடுத்த முடிவை சக தொழிற்சங்கங்களும் ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்ற அதிகார மனப்பான்மையுடன் சிஐடியு நடந்து கொள்வது உடன்பட முடியாததாகும்.

இதுவரை போராட்ட களங்களில் இணைந்து நின்ற தோழமைத் தொழிற்சங்கங்களை விட்டுவிட்டு, அரசியல் செய்ய முனைவோருக்கு உதவும் வகையில் போராட்ட நோக்கத்தை மாற்றிவிட வேண்டாம் என்று சிஐடியுவை தோழமையோடு கேட்டுக்கொள்கிறோம்.

## ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்களின் லட்சிய மாநாடு

# ஊராட்சித் தொழிலாளர்கள் பேரெழுச்சி







### திணறியது திண்டுக்கல் மாநகர்

ஏஐடியுசி தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர்கள் சங்கத்தின் லட்சிய முதல் மாநில மாநாடு 07.01.2024 அன்று திண்டுக்கல் அங்கு விலாஸ் ஹெலிபேடு மைதானத்தில் சங்கத்தின் தலைவர் மு.இராமாநிதி தலைமையில் நடைபெற்றது.

80 ஆயிரம் கிராமங்களைக் கொண்ட 12 ஆயிரத்து 524 ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 38 மாவட்ட ஊராட்சிகளைக் கொண்டு தமிழ்நாட்டின் உள்ளாட்சி நிர்வாகம் செயல்பட்டு வருகின்றது. 4 கோடிக்கும் மேற்பட்ட அதாவது 50% மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். இவர்களின் அடிப்படை தேவைகளான சுகாதாரம், குடிநீர் உள்ளிட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்காக தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், ஊக்குவிப்பாளர்கள், கணிணி இயக்குபவர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையாளர்கள், மகளிர் திட்ட ஊழியர்கள் உள்பட 13 வகை தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

தேசப்பிதா காந்தியடிகள் அவர்களால் நாட்டின் முதுகெழும்பு என்று வர்ணிக்கப்பட்ட கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற உழைத்துவரும் இந்த தொழிலாளர்கள் சுயமரியாதையுடன் கூடிய வாழ்க்கை நடத்த, தக்க ஊதியமும், பணிப் பாதுகாப்பும், சமூகப் பாதுகாப்பும் கோரியே இந்த மாநாடு நடைபெற்றது.

தமிழ்நாட்டின் ஊரக வளர்ச்சித் துறை



நிர்ணயித்துள்ள ஊதியத்தை வெளியில் சொன்னால் வெட்கம் என்ற நிலை விடுதலை அடைந்த காலம் முதல் நீடிக்கிறது. இந்தியாவின் சின்னஞ்சிறு மாநிலமான கோவாவில் மட்டும் தான் ஏஐடியுசியின் போராட்டத்தால் சுயமரியாதையுடன் வாழும் ஊதியம் வழங்கப்படுகிறது.

இந்தியா முழுவதும் கிராம ஊராட்சி தொழிலாளர்களின் நிலை கொடூரமானது. சுயமரியாதை இயக்கம் வேரூன்றி உள்ள தமிழ்நாட்டிலும் அதே நிலையா? கிராமப்புற சாதிய ஆதிக்க சக்திகளிடமிருந்து மீட்டு இத்தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவது தொழிற்சங்க இயக்கத்திற்கும் மிகுந்த சவாலானதாகவே இருக்கிறது.

இந்த நிலையை மாற்றி, கிராம ஊராட்சி தொழிலாளர்களை தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக திரட்டியது திண்டுக்கல் லட்சிய மாநாடுதான்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை தொழிலாளர்கள் சங்கம் திட்டமிட்டு, அதன் நிர்வாகிகள் கடந்த 6 மாத காலமாக ஊராட்சிகள் அனைத்திலும் பணிபுரியும் தொழிலாளர்களை சந்தித்து அணிதிரட்டினர். கிராம கூட்டங்கள், ஒன்றிய கூட்டங்கள். மாவட்ட கூட்டங்கள், மண்டல மாநாடுகள் வாயிலாக தொழிலாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியதன் விளைவாக, பல்லாயிரம் தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குநர்கள் உட்பட 13 வகை தொழிலாளர்கள் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்டு திண்டுக்கல் நகரை திணறடித்தனர்.

தொழிற்சங்கத்தில் தொழிலாளர்களை திரட்டுவது கடினம் என்று பொதுப்புத்தி உருவாகியுள்ள இந்த காலச் சூழலில் சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள இத்தொழிலாளர்களை சங்கம் திரட்டியது.

ஏஐடியுசியின் வழிகாட்டுதலில் சங்கத்தின் பொதுச்செயலாளர் பெ.கிருஷ்ணசாமி, தலைவர் மு.இராமநிதி தலைமையில் சங்க நிர்வாகிகள் பம்பரமாய் சுழன்று திரட்டினர். மாநாட்டு திடலை நோக்கி பேருந்துகளிலும், சிற்றுந்துகளிலும் வந்து மாநாடு தொடங்குவதற்கு முன்பே தொழிலாளர்கள் குவிந்தனர். பிற்பகல் 3.00 மணிக்கு தொடங்க வேண்டிய மாநாடு அரை மணி நேரம் முன்பாகவே தொடங்கியது. களம் பட்டறையின் கலைநிகழ்ச்சிகள், திட்டம் தொடர்பான ஓரங்க நாடகம், கரகாட்டம், தேனி, சிவகங்கை மாவட்ட தப்பாட்டப் பேரணி, குஜிலியம்பாறை கரகாட்டம், தோப்புப்பட்டி பறையாட்டம் என மாவட்ட வாரியாக ஆடல், பாடல், நாடகம் என கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாநாட்டின் பங்கேற்பாளர்களான தொழிலாளர்களே பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினர். நகரமெங்கும் ஏஐடியுசி பதாகையும் சங்கத்தின் பதாகையும் பட்டொளி வீசி பறந்தது.

மாநாடு எதற்காக? தொழிலாளர்கள் தற்போது என்ன நிலையில் உள்ளனர். அவர்கள் எதனை கேட்கிறார்கள்? அரசு என்ன செய்ய வேண்டும்? என்பதை பின்வரும் கோரிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

◆ குடிநீர் மேல்நிலைத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் பணியிடத்தில் தற்போது பணிபுரியும் தற்காலிக ஊழியர்களையும் இணைத்து காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும்.

◆ பதவி நீக்கம் செய்யப்பட்ட தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மாவட்ட, வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை ஊழியர்களையும் உடனடியாக பணியமர்த்த வேண்டும்.

◆ கொரோனா காலத்தில் முன்களப் பணியாளர்களாக பணியாற்றிய கிராம ஊராட்சி பணியாளர்களுக்கு அரசு அறி வித்த கொரோனா ஊக்கத்தொகை ரூ.15 ஆயிரம் வழங்க வேண்டும்.

◆ குடிநீர் மேல்நிலைத் தொட்டி இயக்குபவர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி வெளியிடப்பட்ட அரசாணை 2 (D) எண் 62 தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்: 11102017ன் படி மாத ஊதியம் ரூ.13,848க்கு குறையாமல் காலமுறை ஊதியமும், பணிக்கொடை ஓய்வூதியம், வாரிசு வேலை மற்றும் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

◆ தூய்மை பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி மாத ஊதியம் ரூ.11,848க்கு குறையாமல் கால

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்



Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi, Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by S.Shanmuganathan at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.